REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 319 புரட்டாதி 29ஆம் நாள் வியாழக்கிழமை 15 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051

## சமுர்த்தி அலுவலரின் வீட்டில் நகை திருட்டு

யாழ்ப்பாணம், ஒக். 15
பட்டப்பகலில் சமுர்த்தி அலுவலரின் வீடு உடைக்கப்பட்டு நகைகள் மற்றும் பணம் திருடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் இணுவில் மஞ்சத்தடி பகுதியில் நேற்று புதன் 18




மேலும்
# 132 'கொரோனா' தொற்று
18

### யாழ். பல்கலை நிர்வாகம் அதிரடி

# பகிடி வதையாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை

## நால்வருக்கு ஒரு வருடத் தடை



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 15
யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள்மீது இம்சை வதை புரிந்த சிரேஷ்ட மாணவர்களின் குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்ட நிலையில் அவர்களுக்குக் கடுமையான தண்டனைகளை வழங்குமாறு பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை பரிந்துரைத்துள்ளது. 18

## கட்டுநாயக்கவிலும் ஊரடங்கு

கொழும்பு, ஒக். 15
கட்டுநாயக்க பொலிஸ் பிரிவில் இன்று அதிகாலை 5 மணி முதல் மறுஅறிவிப்பு வரும் வரை ஊரடங்கு உத்த 20



## பொலிஸார் சல்லடை; ரிஷாத் தலைமறைவு

- வெளிநாடு செல்லத் தடை விதிப்பு
- பாதுகாப்பு உத்தியோகத்தர் கைது
- கணக்காளரும் சிக்கினார்

கொழும்பு, ஒக். 15
அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனைக் கைதுசெய்வதற் 20

## புதிய அரசமைப்புக்காக ஓரணியில் திரளுங்கள்!

*பௌத்த, கத்தோலிக்க தலைவர்களிடம் சம்பந்தன் வலியுறுத்துகின்றார்*

கொழும்பு, ஒக். 15
'இலங்கையில் மீண்டும் சர்வாதிகாரத்துக்கு வழி செய்யும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியுள்ள பௌத்த 18

## விலை அதிகரிப்பா?



**அழையுங்கள் 021 222 5000**

யாழ்ப்பாணம், ஒக். 15
"அரசால் விலை குறைப்புச் செய்யப்பட்ட பொருள்களை அதிகரித்த விலையில் விற்பனை செய்தாலோ, அவற்றைப் பதுக்கினாலோ பொதுமக்கள் உடனடியாக யாழ்ப்பாண 18

மட்டக்களப்பு
## மாவட்டச் செயலர் கலாமதி நேற்று உடனடி இடமாற்றம்

*அரசியல் பழிவாங்கல் காரணமா?*

கொழும்பு, ஒக். 15
மட்டக்களப்பு மாவட்டச் செயலர் கலாமதி பத்மராஜா திடீரென இடமாற்றம் செய்யப்பட்டு, புதிய மாவட்டச் செயலராக இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்தை சேர்ந்தவரும், கிழக்கு மாகாண வீதி அபிவி 18

*முச்சந்தி முரளி*

**"நல்லாத்தான் ஒளிச்சுப் பிடிச்சு விளையாடுகினம் கண்டியளோ"**



## கொரோனாத் தொற்றாளர்களுக்கு வடக்கில் சிறப்பு மருத்துவமனை

*இராணுவத் தளபதி தெரிவிப்பு*

கொழும்பு, ஒக். 15
"கொரோனா நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்க வடக்கு மாகாணத்தில் சிறப்பு மருத்துவமனையை அமைக்க இராணுவம் தயாராக உள்ளது" என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். கொரோனாத் தடுப்புச் செய 18

சமாதான முயற்சியில்
## நோர்வே பங்கெடுப்பதை விரும்பினாராம் பிரபாகரன்



கொழும்பு, ஒக். 15
இலங்கைக்கான சமாதான அனுசரணைப்பணியில் நோர்வே பங்கெடுக்கவேண்டுமென விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனே வலியுறுத்தியி 20

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட
## மகனைத் தேடியலைந்த தாயார் ஒருவர் மரணம்

மட்டக்களப்பு, ஒக். 15
காணாமலாக்கப்பட்ட மகனைத் தேடியலைந்த தாயார் ஒருவர் நேற்று சுகவீனம் காரணமாக உயிரிழந்தார். மட்டக்களப்பு மாவட்டம் கொம்மாந்துறை 18

# 5,000 வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகின!!

கொழும்பு, ஒக். 15

**இலங்கையில் நடுத்தரக் குடும்பங்களுக்காக நிர்மாணிக்கப்படவுள்ள 5 ஆயிரம் வீடுகள் அமைக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.**

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஆகியோரின் அறிவுறுத்தலின் பேரில் இந்தக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புகள் கொழும்பு புளுமெண்டல், பேலியகொடை, ஒருகொடவத்தை, கொட்டாவா, பன்னிப்பிட்டிய, மலாபே, கண்டி மற்றும் அனுராதபுரம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்படவுள்ளன.

அடுத்த இரண்டு மாதங்களுக்குள் அனைத்துக் கட்டுமானப் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் செலவு 60 பில்லியன் ஆகும்.

(ம-ற-இ)

# மஹிந்தவின் செயலர் யாழ்ப்பாணத் தமிழர்!



கொழும்பு, ஒக். 15

பிரதமரின் ஒருங்கிணைப்பு செயலாளராக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காசிலிங்கம் கீதநாத் பிரதமர் மகிந்த ராஜபக்சவால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது கா.கீதநாத் எதிர்க்கட்சித் தலைவரின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு பணிப்பாளராகவும், தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்சவின் முன்னாள் பிரத்தியேக செயலாளராகவும் பணியாற்றியிருந்தார்.

பிரதமர் சார்பில் தமிழர் ஒருவர் ஒருங்கிணைப்பு செயலாளராக நியமிக்கப்பட்டது இதுவே முதல் முறை என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

# வவுனியாவில் மட்டும் தடை போடுவது சரியா?

## வாடகைக் கார் உரிமையாளர்கள் கேள்வி

யாழ்ப்பாணம், ஒக். 15

வாடகைக் கார் சேவைக்கு வவுனியாவில் மட்டும் தடை விதிக்க முயற்சிப்பது ஏன்? என்று கேள்வியெழுப்பியுள்ள வாடகைக் கார் உரிமையாளர் சங்கம், அது குறித்த நடவடிக்கை தொடர்பில் கவலை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட வாடகைக் கார் உரிமையாளர் சங்கத் தலைவர் ச.சாந்தன் தெரிவித்ததாவது:

வவுனியாவில் வாடகைக் கார் சேவையில் ஈடுபடுவதற்கு 18 பேர் சங்கமாக ஒன்றிணைந்து இயங்கி வருகின்றோம். 5 பேருக்கான அனுமதியை வவுனியா நகரசபை ஊடாக பெற்றிருந்தோம்.

அத்துடன் வாடகைக் கார் போக்குவரத்துக்கான அனுமதியை வவுனியா தலைமைப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும் வழங்கியிருந்தார். இதற்கமைவாகவே வவுனியா நகரசபையினர் வவுனியா மருத்துவமனை முன்பாக எமக்கு ஒரு நேரத்தில் ஒரு வாடகைக் காரை மட்டும் நிறுத்துவதற்கு இடமும் ஒதுக்கித் தந்திருந்தனர்.

வடக்கின் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் மாங்குளம் ஆகிய பகுதிகளில் வாடகைக் கார் சேவை நடைமுறையில் உள்ளது. அவ்வாறிருக்கும் நிலையில் வவுனியாவில் மட்டும் முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் மறுப்பு தெரிவித்து வருகின்றது. அத்துடன், வாடகைக் கார் சங்கத்தின் உறுப்பினர் ஒருவர்மீது தாக்குதல் நடத்தப்பட்டு, உயிர் அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் வவுனியா பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளோம். -

எமது வாடகைக் கார் சேவையின் ஊடாக முச்சக்கரவண்டிகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது. நாமும் வாழ்வாதாரத்துக்காகவே போராடுகின்றோம். வவுனியா நகரசபை அமர்வில் குறித்த விடயம் விவாதிக்கப்பட்டு அனுமதியும் வழங்கப்பட்டுள்ள நிலையில் எமக்கான அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன. எனவே எமக்கு நீதி வேண்டும். என்று அவர் கோரிக்கையும் விடுத்தார்.

வாடகைக் கார் உரிமையாளர்களைத் தடை செய்யக்கோரி முச்சக்கரவண்டிச் சாரதிகள் வவுனியா நகரில் நேற்று ஒன்றுகூடியதால் குழப்பம் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த18)

(மற்றொரு செய்தி பக்கம்-6)


# கைதடி கமநல சேவை நிலையத்தில் உர விநியோகம்

சாவகச்சேரி, ஒக். 15

தென்மராட்சி தெற்கு ஜே/296 கோவிலாக்கண்டி கிராம அலுவலர் பிரிவு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட காலபோக நெற் செய்கையாளர்களுக்கான மானிய உரவகைகள் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் பிற்பகல் 3.30 மணி வரை கைதடி கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகிக்கப்படவுள்ளன.

அமைப்பின் உறுப்பினர்கள் இந்த வருடத்துக்கான சந்தா செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் கமநல சேவைகள் நிலையத்தில் ஏக்கர் வரி செலுத்திய பற்றுச்சீட்டு மற்றும் டோக்கன் ஆகியனவற்றைக் கொண்டுவருமாறு அமைப்பின் செயலாளர் ச.புஷ்பாகரன் அறிவித்துள்ளார். (த9)

# வவுனியாவில் காற்று பறந்தன கூரைகள்;



வவுனியா, ஒக். 15

வவுனியாவில் நேற்று வீசிய பலத்த காற்று காரணமாக வீடுகளின் கூரைகள் தூக்கி வீசப்பட்டன. 14 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்று இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.

வவுனியா வடக்கு, வவுனியா தெற்கு, வவுனியா, செட்டிகுளம் போன்ற பகுதிகளில் 13 வீடுகளின் கூரைகள் நேற்று சேதமடைந்துள்ளன. நேற்று முன்தினம் நெடுங்கேணியிலும் ஒரு வீடு சேதமடைந்திருந்தது.

இந்த சம்பவங்களில் குறித்த வீடுகளில் வசித்து வந்த 36 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்தது.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அந்தப்பகுதி கிராம அலுவலர்கள் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அந்தப் பிரிவு மேலும் தெரிவித்தது. (த-இ)

# வவுனியா விபத்தில் ஒருவர் காயம்

வவுனியா, ஒக். 15

வவுனியா கதிரேசு வீதியில் நேற்றிரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் பிக்கப் வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார். அவர் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். கதிரேசு வீதியூடாக வைரவப்புளியங்குளம் நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மீது கதிரேசு வீதி முதலாம் ஒழுங்கையில் வந்த பிக்கப் வாகனம் மோதி விபத்து இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது. (த-18)

# கொவிட்-19 தொற்றாளர்களை அறிய ஆர்.எம்.எஸ். முறையைப் பின்பற்றவும்

## முன்னாள் சுகாதார அமைச்சர் ராஜித அறிவுரை

கொழும்பு, ஒக். 15

கொவிட் -19 தொற்றாளர்களை விரைவில் அறிந்து கொள்ளக்கூடிய ஆர்.எம்.எஸ் (R.M.S - Robotic Magnetic system) எனப்படும் நவீன மருத்துவ பரிசோதனையின் மூலமாக பீ.சி.ஆர். பரிசோதனையை மேற்கொண்டால் வெறும் 70 நிமிடங்களில் தொற்றாளரை இனங்கண்டுகொள்ள முடிவதுடன், நாட்டில் கொவிட் 19 தொற்றையும் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும் என்று முன்னாள் சுகாதார அமைச்சரும் இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சிக் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"தற்போது நாட்டில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றமையை கொவிட் -19 இன் இரண்டாம் அலை என எவர் கூறினாலும், அதனை ஏற்கமாட்டேன். ஏனெனில், கொவிட் -19 இன் தாக்கம் இன்னும் 2 வருடங்களுக்கு இருக்கும் என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்திருக்கின்றது.

எனவே, தற்போது நாம் பயன்படுத்தும் பீ.சி.ஆர். பரிசோதனை முறைமையை விடவும் ஆர்.எம்.எஸ். மருத்துவ பரிசோதனை முறைமையைக் கையாள்வது சிறப்பாகும்.

இந்த மருத்துவ வசதிகள் தற்போது கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றை விமானம் மூலம் இலங்கைக்கு வரும் பயணிகளிடம் செயற்படுத்திக் கொள்ளுமாறு அரசைக் கோருகின்றேன். முடியுமானால் இந்த நவீன மருத்துவ பரிசோதனையை நாட்டில் உள்ளவர்களுக்கும் செயற்படுத்துங்கள். ஏனெனில், சாதாரணமாக நாம் செய்யும் பி.சீ.ஆர். பரிசோதனைக்கு 3 ஆயிரத்து 30 ரூபாவுடன் இதர மருத்துவ சிகிக்சைகளுக்கென மொத்தமாக 4ஆயிரத்து 300 ரூபா செலவாகிறது.

புதிய மருத்துவ முறைமையில் 4 ஆயிரத்து 900 ரூபா செலவாகிறது. எனினும், பழைய முறையில் பி.சீ.ஆர். பரிசோதனைக்கு 6 மணித்தியாலங்களுக்கும் அதிக நேரம் தேவைப்படுகின்றபோதிலும், புதிய முறையில் வெறும் 70 நிமிடங்களில் கொரோனா நோய்த் தொற்றுக்குள்ளானவரை இனங்காண முடியும், என்றார். (த-இ)

## கட்டுமீறும் கொரோனா :

# 22 மாவட்டங்களில் தாண்டவம்!!



கொழும்பு, ஒக். 15

**மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை கொரோனா கொத்தணிப் பரவல் நாட்டில் 22 மாவட்டங்களைப் பாதிப்படையச் செய்துள்ளது. அந்த மாவட்டங்களைச் சேர்ந்த ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். சகல இடங்களிலும் மக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மினுவாங்கொட கொத்தணி கொரோனா பரவலை நாம் உடன் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் பேராபத்தைச் சந்திக்க வேண்டி வரும்.

பொது விடுதிகளில் தங்கியிருந்து பல்வேறு இடங்களில் பணிபுரிந்து வருபவர்கள் இது குறித்து பணிபுரியும் தமது நிறுவன பிரதானிகளிடம் அறிவிக்க வேண்டியது அவசியமாகும். கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசு எடுத்துவரும் முயற்சிகளில் இதுவும் ஒன்றாகும். இது விடயத்தில் தொடர்புடைய அனைவரும் இந்த அறிவித்தலைக் கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட கொரோனாத் தொற்று அங்கு பணியாற்றுபவர்கள் மூலம் பல்வேறு தரப்பினருக்கும் பரவலடைந்து வருகின்றது. தனது கணவனுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை அறிந்தும் பணிக்குச் சென்ற பெண்ணால் பாரிய நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. குறித்த பெண் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலய ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றியமையால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அங்கு பணியாற்றும் பலருக்குத் தொற்று ஏற்பட்டுள்ளது. தொற்றுக்குள்ளான பெண்ணின் கணவன் மினுவாங்கொட பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுகின்றார்- என்றார். (ஒ,22)

## மூன்றாவது அலைக்கு முழுப்பொறுப்பும் அரசே

### சாடுகிறது சஜித் அணி

கொழும்பு, ஒக். 15



இலங்கையில் கொரோனாவின் 3ஆவது அலை ஏற்பட்டதற்கான பொறுப்பை அரசு ஏற்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு வைரஸைக்கூட அரசியலுக்காக பயன்படுத்துகிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் சீனாவில் உருவாகி உலக நாடுகளுக்கு பரவும் நிலையில் அது தொடர்பில் கடந்த டிசெம்பர் மாதமே நாம் அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தோம். எமது கோரிக்கைக்கு செவிமடுத்திருந்தால் கொரோனா வைரஸ் நாட்டுக்குள் வருவதை தடுத்த நாடு என்ற பெருமை இலங்கைக்கு கிடைத்திருக்கும். எனினும், குதிரை ஓடிய பிறகு லாயத்தை மூடுவது போலத்தான் கொரோனா விடயத்தில் அரசின் அணுகுமுறைகள் அமைந்தன. மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலை கொத்தணி பரவலின் ஆரம்பப்புள்ளி எது என்பது தொடர்பில் அரசு இன்னும் அறிவிக்கவில்லை. எனவே, இனியாவது அரசு பொறுப்புணர்வுடன் செயற்படவேண்டும் என கேட்டுக்கொள்கின்றோம்.

பொதுத்தேர்தலின் பின்னர் கொரோனா ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணி இரண்டு மாதங்களாகக் கூடவில்லை எனக்கூறப்படுகின்றது. எனவே, ஜனாதிபதி, சுகாதார அமைச்சர் முதல் மேற்படி செயலணியில் இருந்த அனைவரும் இதற்கான பொறுப்பை ஏற்கவேண்டும்.

தேர்தல் முடிவடைந்த பிறகு கூடவில்லையெனில் அதற்கு முன்னர் வைரஸைக்கூட அரசியலுக்காகவே இந்த அரசு பயன்படுத்தியுள்ளது. கொரோனா வைரஸ் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது, நேரடிப் பதில்களை வழங்காமல் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலம் பற்றியே சுகாதார அமைச்சர் கதைத்தார். எனவே, இலங்கையில் 2ஆவது முறையும் வைரஸ் பரவல் ஏற்பட்டதற்கான பொறுப்பை அரசு ஏற்கவேண்டும்.- என்றார். (ஒ,44)

## குடும்பப் பெண் சடலமாக மீட்பு

வவுனியா, ஒக். 15

வவுனியா கற்பகபுரம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட புதிய கற்பகபுரம் பகுதியில் இரு பிள்ளைகளின் தாயார் சடலமாகநேற்றுகாலை மீட்கப்பட்டுள்ளார். முத்துக்குமார் கஜனி (வயது 27) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது வீட்டிலிருந்து காலை 6.30 மணியளவில் 3 வயது மற்றும் 7 வயது பிள்ளைகளுடன் கணவர், தாயார் வீட்டிற்கு சென்றுள்ளார். அவரது மனைவி வீட்டில் தனிமையில் இருந்துள்ளார். காலை 8.45 மணியளவில் கணவர் வீடு திரும்பியிருந்தார்.

வீட்டினுள் சென்று பார்த்தபோது மனைவி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்படுதை அவதானித்துள்ளார். பொலிஸாருக்கு இது தொடர்பில் கணவர் அறிவித்துள்ளார். (ஒ,18)

## உ/த பரீட்சை எழுதும் மாணவனுக்கு கொரோனா

கொழும்பு, ஒக். 15

திவுலப்பிட்டிய ஞானோ தயா மத்திய கல்லூரியில் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவன் உள்ளிட்ட எட்டு மாணவர்களுக்கு கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. க.பொ.த உயர்தரம், தரம் 3,4,7,8 இல் கல்வி பயிலும் மாணவர்களே கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். அங்கிருந்தபடி அவர் உயர்தர பரீட்சையில் தோற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பரீட்சைகள் ஆணையாளர் சனத் பூஜித தெரிவித்தார். (ஒ,இ)

## பெண்கள் இருவர் மரம் வீழ்ந்து சாவு

கொழும்பு, ஒக். 14

பலாங்கொடை வலவத்த தோட்டத்தில் மரம் வேரோடு முறிந்து விழுந்து இரண்டு பெண்கள் நேற்று காலை உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலாங்கொடை பின்னவல வலவத்த தோட்டத்தில் இரு பெண்கள் தேயிலை பறித்து கொண்டிருந்த வேளை அவர்கள் மீது மரம் வேரோடு முறிந்து விழுந்ததில் உயிரிழந்துள்ளார்கள். (ஒ,இ)

# கொழும்புக்கு கட்டுப்பாடு இல்லை: ஆனாலும் அவதானம் தேவை

### சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் மருத்துவர் ஜயருவன் பண்டார தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 15

கம்பஹா மாவட்டத்தைப்போல் கொழும்பு மாவட்டத்துக்கும் கட்டுப்பாடுகளை விதிக்க இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று சுகாதார அமைச்சின் ஊடகப்பேச்சாளர் மருத்துவர் ஜயருவன் பண்டார நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொவிட் -19 வைரஸ் என்பது மனிதனில் இருந்து மனிதனுக்கு பரவக்கூடியது. எனவே, ஆள் நடமாட்டம் அதிகமாகவுள்ள பகுதிகளில் அது வேகமாகப் பரவக்கூடும். மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள பகுதிகளுக்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு கடந்த காலங்களில் கோரியிருந்தோம். கொழும்பு மாவட்டத்தில் குறுகிய பிரதேசத்துக்குள் அதிகளவானவர்கள் வாழ்கின்றனர், வீடுகளிலும் அதிகளவானவர்கள் இருக்கின்றனர். வைரஸ் தாக்கம் ஏற்பட்டால் அது வேகமாக பரவக்கூடும். மக்கள் தமது சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

சுகாதார நடைமுறைகளை முழுமையாக பின்பற்றவேண்டும். சுகாதார மற்றும் பாதுகாப்பு தரப்பினரும் இது தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளனர்.

மினுவாங்கொட கொத்தணிபரவல்மூலம் கொழும்பு மாவட்டத்தில் 160 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கம்பஹா மாவட்டத்தைப் போல் கொழும்பில் கட்டுப்பாடுகளை விதிக்கும் தீர்மானம் தற்போதைக்கு மேற்கொள்ளப்படவில்லை. எது எப்படியிருந்தாலும் மக்கள் தமது சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

அதேவேளை, கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்குத் தேவையான வசதிகள் உள்ளன. நோயாளிகளுக்கான கட்டில்களும் போதுமானளவு இருக்கின்றன, என்று அவர் குறிப்பிட்டார். (ஒ,44)

# நாட்டில் சமூகப்பரவல் இதுவரை இல்லை

### சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.15**
**மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையுடன் தொடர்புடைய கொவிட்19 கொத்தணி 21 மாவட்டங்களில் பரவியுள்ள போதிலும், தொற்றுமூலம் இனங்காணப்பட்டு வருவதால் இன்னும் சமூகப்பரவல் ஏற்படவில்லை என்று சுகாதார அமைச்சின் ஊடகப் பேச்சாளர் வைத்தியர் ஜயருவான் பண்டார தெரிவித்துள்ளார்.**



அடிப்படை சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுவதன்மூலம் தொற்றிலிருந்து ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளலாம் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் மாத்திரம் மினுவாங்கொட கொத்தணியுடன் தொடர்புடைய 160 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இந்த மாவட்டத்தில் சனத்தொகை அதிகம் என்பதாலேயே இவ்வாறு அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, மினுவாங்கொட கொத்தணியுடன் தொடர்புடைய தொற்றாளர்கள் பரவலாக இனங்காணப்படுகின்ற போதிலும் தொடர்பாளர்கள் இலகுவாகக் கண்டறியப்படுகின்றமையால் இதனைக் கட்டுப்படுத்த முடியும் என்று நம்புகின்றோம்.

தொற்று அறிகுறிகள் அல்லது தொடர்புகளைப் பேணியவர்கள் தகவல்களை வழங்காமல் அல்லது போலியான தகவல்களை வழங்கிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இவை தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன - என்றார். (ற-இ)




## சிறந்த விமான நிறுவனங்களில் ஒன்றாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

கொழும்பு, ஒக்.15
உலகின் சிறந்த 10 விமான நிறுவனங்களில் ஒன்றாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தெரிவாகியுள்ளது. அதன்படி இந்த நிறுவனம் 6 ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது. “கொன்டே நெஸ்ட்”சுற்றுலா இதழ், 2020 ஆண்டுக்கான உலகின் சிறந்த 10 விமான சேவை நிறுவனங்களுக்கான பட்டியலை வெளியிட்டது.

இந்த இதழின் வாசகர்களின் தேர்வுகளுக்கமைவாக இந்த நிறுவனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. ஆஸ்திரேலிய கொன்டாஸ் விமான சேவை நிறுவனம் 5 ஆவது இடத்தையும், நியூசிலாந்தின் விமான சேவை 4 ஆவது இடத்தையும், கட்டார் விமான சேவை 3 ஆவது இடத்தையும், எமிரேட்ஸ் நிறுவனம் இரண்டாவது இடத்தையும், சிங்கப்பூர் விமான சேவை நிறுவனம் முதலாவது இடத்தையும் பெற்றுக்கொண்டன. (ற-இ)

## மாலைதீவிலிருந்து இலங்கை வந்தவருக்கு கொரோ்னா

கொழும்பு, ஒக்.15
கடந்த 4 மாதங்களுக்கு முன்னர் மாலைதீவிலிருந்து இலங்கை வந்து தன்மைப்படுத்தலை நிறைவு செய்த நபர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார் என்று கஹவத்தை நிர்வாக பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி கஹவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளார்.

இவர் மீண்டும் வெளிநாடு செல்வதற்குத் தயாராகிய நிலையில், மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் இவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவருடன் நெருங்கிச் செயற்பட்ட இவரது உறவினர்கள் மற்றும் இவர் சென்ற வர்த்தக நிலையங்க ளில் உள்ளவர்கள் உள்பட பலர் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மாலைதீவிலிருந்து வந்த பின்னர் இந்த நபரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொண்ட போது அவருக்கு கொரோனாத் தொற்று இல்லை என உறுதி செய்யப்பட்டது என்று பொது சுகாதாரப் பரிசோதகர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-இ)

### விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த

## பழுதடைந்த அரிசி மூடைகள் மீட்பு

கொழும்பு, ஒக்.15
விற்பனை செய்யும் நோக்கில், வைக்கப்பட்டிருந்த சுமார் 500 கிலோ பழுதடைந்த அரிசி மூடைகள் கொட்டகலை நகரிலுள்ள வர்த்தக நிலையங்களிலிருந்து நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளன என்று பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

கொட்டகலை பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் நேற்றுமுன்தினம் திடீர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

பொது சுகாதாரப் பரிசோதகர் சௌந்தராகவன் உட்பட சுகாதாரப் பரிசோதகர்கள் இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது இரு வர்த்தக நிலை யங்களில் இருந்து பழுதடைந்த அரிசி மூடைகள் மீட்கப்பட்டுள்ள நிலையில், இந்த வர்த்த கர்களுக்கு எதிராக எதிர்வரும் 23 ஆம் திகதி ஹற்றன் மாவட்ட நீதிமன்றத்தில் வழக் குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (ற-இ)

## ஊரடங்கைத் தளர்த்துவது தொடர்பில் இன்று தீர்மானம்

கொழும்பு, ஒக்.15
கம்பஹா மாவட்டத்தின் 18 பொலிஸ் பிரிவுகளில் உள்ள ஊரடங்குச் சட்டத்தை தளர்த்துவது தொடர்பில் இன்று தீர் மானிக்கப்படவுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.



அத்துடன் அந்தப் பிரதேசங்க ளில் கடைகளையும் மருந்தகங்களையும் திறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றை இன்று திறப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஊரடங்குச் சட்டம் உள்ள பிரதேசங்களுக்குப் பயணிப்பதை முழுமையாகத் தவிருங்கள், ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள பிரதேசங்களில் எவரையும் வாகனங்களில் ஏற்றவோ வாகனத்தில் இருந்து இறக்கவோ கூடாது, அந்தப் பிரசேதங்களில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு இந்த விதிமுறை பொருந்தாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ற-இ)

## ஊரடங்கை மீறிய 135 பேர் கைது

கொழும்பு, ஒக்.15
நாட்டில் தற்பொழுது அதிகரித்துள்ள கொரோனாத் தொற்றை அடுத்து, கம்பஹா மாவட்டத்தில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்ட பகுதிகளில், ஊரடங்கு உத்தரவை மீறிச் செயற்பட்ட குற்றச்சாட்டில் இதுவரை 135 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

மேலும், இதுவரையில் 37 வாகனங்களும் பொலிஸாரின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (றஇ)

## பிரதமரின் பிரத்தியேக ஒருங்கிணைப்பாளராக கருணா

கொழும்பு, ஒக்.15
கருணா என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பிரத்தியேக ஒருங்கிணைப்பாளராக நேற்று நியமிக்கப்பட்டுள்ளார். (ற-இ)

## சமிக்ஞை விளக்குகள் தானாக இயங்கும் செயன்முறை ஆரம்பம்

கொழும்பு, ஒக்.15
கொழும்பின் வீதிகளிலுள்ள வீதி சமிக்ஞை விளக்குகளைத் தானாக இயங்கச் செய்வதற்கான செயன்முறை ஒன்று நேற்றுக் காலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அதன்படி, பொலிஸார் இன்றி வீதிகளில் உள்ள சமிக்ஞை விளக்குகள் தானாக இயங்குவதற்கான செயன்முறைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

காலி வீதி, பேஸ்லைன் வீதி, மாலபே சந்தி, கெஸ்பேவ சந்தியிலிருந்து கொஹுவளை வரை மற்றும் இராஜகிரிய உள்ளிட்ட பல பகுதிகளில் இன்று முதல் இந்தச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டது. (ற-இ)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இலங்கையில் பிரதிபலிக்கும் இஸ்ரேலியக் கொள்கைகள்!

இஸ்ரேல் ஒரு யூத நாடு. பலஸ்தீனத்தை ஆக்கிரமித்துத் தான் அந்த நாடு கட்டியெழுப்பப்பட்டுள்ளது. பலஸ்தீனத்தை நெருக்கடிக்குள் தள்ளுவதன் மூலமும், அடக்குமுறையைப் பயன்படுத்துவதன் மூலமும்தான் தமது நாட்டை வலிமைமிக்கதாக ஆக்க முடியும், எல்லைகளைப் பலப்படுத்த முடியும் என்று இஸ்ரேல் எண்ணுகின்றது. அவ்வப்போது இஸ்ரேலிய ஆட்சியாளர்களுக்கு எதிராகக் குரல் எழுப்பப்படும்போது பலஸ்தீனத்தின் மீதும், ஹமாஸ் போராளிகள் மீதும் இஸ்ரேலால் காரணமின்றித் தாக்குதல் நடத்தப்படும். அல்லது தாக்குதலின் பின்னர் ஏதாவது சப்பைக்கட்டுக் காரணம் சொல்லப்படும். எதற்காக இது செயற்படுத்தப்படுகின்றது? என்று கேள்வி எழுப்பினால் அதற்கான பதிலாக 'திசைதிருப்பல்' என்பது அமையும். அதாவது மக்களிடத்தில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பை புறந்தள்ளுவதற்கு அல்லது திசைதிருப்புவதற்கு பாவப்பட்ட பலஸ்தீனத்தை அடிப்பது இஸ்ரேலியக் கொள்கை. ஒரு கோட்டை சிறிய கோடாக மாற்றுவதற்கு அதன் பக்கத்தில் பெரிய கோடு வரையும் முயற்சி இது. இதே கொள்கையைத்தான் தற்போதைய கோத்தாபய அரசும் நடைமுறைப்படுத்தியுள்ளது. அதில் ஓரளவு வெற்றியும் கண்டுள்ளது.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு இலங்கையில் பெரும் எதிர்ப்பலை ஏற்பட்டுள்ளது. இலங்கையின் தலைவிதியைத் தீர்மானிக்கக்கூடிய பௌத்த பீடங்கள் கூட 20ஆவது திருத்தம் வேண்டாம் என்று எதிர்ப்பைக் காட்டியுள்ளன. அரசின் பங்காளிகளாக இருக்கும் சில கட்சிகளும்கூட இந்தத் திருத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. ஒரு முனையில் 20ஆவது திருத்தத்தின் மீதான அரசின் நகர்வுகளே சிங்கள மக்கள் மத்தியில் அரசுக்கு எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொடுத்திருக்கையில், கோத்தாபயவின் ஆட்சிக்கு மேலும் சரிவைக் கொடுத்திருக்கின்றது கொரோனாப் பெருந்தொற்று. இந்த இரண்டு விடயங்கள் மீதும் மக்களுக்கும் ஊடகங்களுக்கும் இருக்கும் கவனக்கு விவைத் திசை திருப்புவதற்கு கோத்தாபய அரசு கையில் எடுத்துள்ள குறுக்கு வியூகம்தான் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள்.

அரசு எதிர்பார்த்ததைப் போலவே முன்னணி ஊடகங்கள் பலவினதும், சிங்கள ஊடகங்கள் பலவினதும் இன்றைய மற்றும் நேற்றைய தலைப்புச் செய்திகள் 'ரிஷாத்தைக் கைதுசெய்ய தனிப்படைகள் அமைக்கப்பட்டுள்ளன' என்பதாகவே அமைந்துள்ளன. தற்போது ரிஷாத் என்ற பெருங்கோட்டின் நிழலில் 20ஆவது அரசமைப்பு, கொரோனாப் பெருந்தொற்றின் மூன்றாம் அலை ஆகிய இரு சிறிய கோடுகளும் மறைக்கப்பட்டுள்ளன. ரிஷாத் விவகாரம் மேலும் பெருப்பிக்கப்பட்டு பூதாகர நிலையை அடையும்போது மற்றைய இரு விடயங்களில் இருந்தும் மக்களின் கவனக்குவிவு கலையும் அல்லது மலினப்படும். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி 20ஆவது திருத்தத்தை கோத்தாபய அரசு நிறைவேற்றினால்கூட அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

நாடற்றவர்களாக பலஸ்தீனர்களை ஆக்குவதுதான் இஸ்ரேலின் வெற்றி என்ற எழுதப்படாத விதி, அங்குள்ளதைப்போன்று சிறுபான்மையினரான தமிழர்களையும் முஸ்லிம்களையும் அடக்குவதும், மலினப்படுத்துவதும்தான் சிங்கள பேரினவாத அரசின் வெற்றி மற்றும் இருப்பு என்ற எழுதப்படாத விதி இங்குள்ளது. இந்தக் குரூர மனப்பான்மையும், இதயசுத்தியற்ற எண்ண வோட்டமும் இருக்கும் வரையில் இன்னொரு குருதிச் சகதியை இந்த நாடு சந்திக்க நேர்ந்தாலும் வியப்பில்லை.

# அரசியல் கட்சிகள் 6 புதிதாகப் பதிவு

கொழும்பு,ஒக்.15

**ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் கட்சிகளாக, 6 அரசியல் கட்சிகள் தேர்தல்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளன.**

அருணலு ஜனதா பெரமுன, ஜனதா சேவக கட்சி, புதிய ஜனநாயக மார்க்சிஸ்ட் லெனினிசக் கட்சி, பிவித்துரு ஹெல உருமய, சமத்துவ கட்சி மற்றும் சிங்கள ராவய ஆகிய கட்சிகளே பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வருடத்தில் புதிய அரசியல் கட்சிகளைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கடந்த ஜனவரி மாதம் கோரப்பட்டிருந்தன. அதற்கமைய 154 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அடிப்படைப் பரிசீலனைகளின் பின்னர், 121 கட்சிகளுடன் நேர்காணல் இடம்பெற்றது. அதில் ஆறு கட்சிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. (சு-இ)

## பணியாளர்களை அழைக்கும் நடவடிக்கை மீள ஆரம்பம்

மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிவதற்காகச் சென்ற இலங்கையர்களை, நாட்டுக்கு அழைத்து வரும் செயற்பாடுகள் அடுத்த மாதம் முதல் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

நாட்டிலுள்ள கண்காணிப்பு முகாம்களில் காணப்படும் இட வசதிகளைக் கருத்தில்கொண்டு, அவர்களை நாட்டுக்கு அழைத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து சுமார் 45ஆயிரம் பேர் நாடு திரும்புவதற்கான எதிர்பார்ப்பில் உள்ளனர்.

இதேவேளை, வெளிநாடுகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில், 68 இலங்கைப் பிரஜைகள் உயிரிழந்துள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொது முகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 5 இலட்சம் ரூபா வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மங்கள ரந்தெனிய மேலும் தெரிவித்துள்ளார். (சு-இ)

## 11 கைதிகளுக்கு பலத்த பாதுகாப்பு

கொழும்பு,ஒக்.15

பழைய போகம்பர சிறைச்சாலையில் குழப்பம் விளைவித்த 11 கைதிகளுக்கு, பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அவர்கள் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் முற்படுத்தப்படுவர் என்று சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டு ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனை மற்றும் கடத்தல் குற்றச்சாட்டுகளில் 11 பேரும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் பழைய போகம்பர சிறைச்சாலையில் அமைக்கப்பட்டுள்ள, கண்காணிப்பு நிலையங்களில் இருந்து தப்பிச்செல்வதற்கு முயற்சித்துள்ளனர். தமது உணவுப் பாத்திரத்தை கூரிய ஆயுதமாக மாற்றியுள்ளதுடன், சிறைச்சாலை உத்தியோகத்தரை அச்சுறுத்தி, அங்கிருந்து தப்பிச் செல்ல முற்பட்டுள்ளனர். இதன்போது சிறைச்சாலை உத்தியோகத்தர், மற்றுமொரு உத்தியோகத்தரின் உதவியுடன் கைதிகளின் முயற்சியை முறியடித்துள்ளார்.

கைதிகளுடன் ஏற்பட்ட மோதலில், சிறைச்சாலைப் பாதுகாவலர் காயமடைந்துள்ளார். சம்பவம் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களத்தால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (சு-இ)

# அரசுக்கு "கொவிட்-20"

## மனோ எம்.பி. நையாண்டி



கொழும்பு, ஒக்.15

நாட்டைப் பீடித்திருக்கும் நோய் "கொவிட்-19". ஆனால் 20ஆவது திருத்தத்தை வைத்துக் கொண்டு தள்ளாடும் அரசுக்குப் பீடித்திருப்பது "கொவிட்-20" நோய் இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசுக்குள் இப்போது 20ஆவது திருத்தம் தொடர்பாக பெரும் கலகம் நடக்கின்றது. எதிரணியில் உள்ள நாம் 20ஐ எதிர்ப்பதைப் போன்று அரசுக்குள் இருந்தும் பலர் எதிர்ப்புக் குரல் எழுப்பத் தொடங்கியுள்ளனர்.

அமைச்சர்கள் விதுர விக்கிரமநாயக்க, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச ஆகியோர் அரசுமீது அதிருப்தி அடைந்துள்ளார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாச ராஜபக்ச இப்போது இரண்டாவதுமுறை 20ஆவது திருத்தம் தொடர்பில் ஜனாதிபதிக்கு "காதல்" கடிதம் எழுதியுள்ளார். அதற்குப் பதில் இல்லை. அது ஒரு தலைப்பட்சக் காதல் போலிருக்கிறது. அரசுக்கு ஆதரவு அளித்த பல தேரர்கள், சமூகத் தலைவர்கள் எதிர்க்குரல் எழுப்புகிறார்கள். இதுதான் தற்போது அரசைப் பீடித்துள்ள "கொவிட் -20" நோயாகும்.

அதை மறைக்கவே இன்று இந்த அரசு, வழமைபோல் இனவாதத்தை கையில் எடுத்துள்ளது. அதனாலேயே நண்பர் ரிஷாத் பதியுதீன் மீது கைது முயற்சி நடைபெறுகிறது. அவரைக் கைதுசெய்துவிட்டு, நாட்டில் "ரிஷாத் கைது" என செய்தி தலைப்பை உருவாக்க அரசு முயல்கிறது.

கடந்த காலங்களில், உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பில், தம்மிடம் முழுமையான சாட்சியங்கள், தகவல்கள் இருக்கின்றன என்று பகிரங்கமாக பலமுறை கூக்குரல் இட்ட விமல் வீரவன்ச போன்றோரைத்தான் அரசு கைது செய்ய வேண்டும். பொய்ச் சாட்சியம் கூறினார்கள் அல்லது இன்னமும் தங்களிடம் இருக்கின்ற தகவல்களை மறைக்கின்றார்கள் என விமல் வீரவன்சவையும் அன்று வரிசையாகக் குற்றப்புலனாய்வுப் பிரிவு தலைமையகம் சென்று அனைவரையும் அரசு கைதுசெய்து, உடன் விசாரித்து, உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பில் உண்மைகளை வெளியே கொண்டு வர வேண்டும். என்றார். (எ-இ)

# வாடகைக் காருக்கான அனுமதியை நீக்குமாறு ஓட்டோச் சாரதிகள் போர்

## வவுனியாவில் சம்பவம்

**வவுனியா, ஒக்.15**

**வாடகைக் காருக்கான அனுமதியை இரத்துச் செய்யக்கோரி, 30க்கும் மேற்பட்ட முச்சக்கரவண்டிச் சாரதிகள், தமது முச்சக்கர வண்டிகளுடன் வவுனியா நகரசபை முன்பாக ஒன்று கூடியதால் அவ்விடத்தில் சற்று பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டது.**



சம்பவம் நேற்றுமுன்தினம் பகல் 1.30 மணியளவில் இடம்பெற்றது. ஏனைய சில மாவட்டங்களில் நடைமுறையில் உள்ள வாடகைக் கார் பயன்பாட்டையடுத்து, வவுனியா நகரின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு, நகரசபைக்குட்பட்ட பகுதியில் வாடகைக் கார் செலுத்துவதற்கு நபர் ஒருவருக்கு வவுனியா நகர சபையால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் வாடகைக் காருக்கான குறித்த அனுமதியை இரத்துச் செய்யக்கோரியே வவுனியா முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தினர் வவுனியா நகரசபைக்கு முன்பாக 30க்கு மேற்பட்ட முச்சக்கரவண்டிகளில் ஒன்று கூடினர்.

இதனால் அங்கு சற்று நேரம் பதற்றம் ஏற்பட்டது. எனினும், வவுனியா நகரசபைத் தவிசாளர் காரியாலயத்தில் முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினருக்கும் வவுனியா நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன் மற்றும் நகரசபைச் செயலாளர் ஆர். தயாபரன் ஆகியோருக்குமிடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. வாடகைக் காருக்காக வழங்கப்பட்ட அனுமதியை தற்காலிகமாக நிறுத்துவதாகவும் எதிர்வரும் நகரசபைக் கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என்றும், இதன்போது வவுனியா நகரசபைத் தவிசாளர் இ.கௌதமன் தெரிவித்தார். இதனை அடுத்து முச்சக்கர வண்டிச் சாரதிகள் அவ்விடத்தை விட்டு கலைந்து சென்றனர். (ப-18)



கிளிநொச்சி, கண்டாவளை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பெரியகுளம் பகுதியில் 6 லட்சத்து 65ஆயிரம் ரூபா செலவில், மூன்று கிலோமீற்றர் நீளமான வீதிகள் கரைச்சி பிரதேசபையால், அபிவிருத்தி செய்யப்படுகின்றன. பிரதேச சபை உறுப்பினர் ஜீவராசா தலைமையில் அதன் பணிகள் இடம்பெறுகின்றன. (ப-113)

# தோட்டக் காணியிலிருந்து துப்பாக்கி ரவைகள் மீட்பு

சாவகச்சேரி. ஒக். 15.

மண்ணில் புதைத்து வைக்கப்பட்ட பெட்டியில் ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் மீட்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் சாவகச்சேரி கெருடாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றது. பயிர் செய்வதற்கு காணியைத் துப்பரவு செய்தபோது காணியில் பெட்டி ஒன்று காணப்பட்டுள்ளது. அதனை எடுத்துப்பார்த்த விவசாயி அதனுள் ஒரு தொகை துப்பாக்கி ரவைகள் இருப்பதை அவதானித்துள்ளார். தொடர்ந்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் அவர் முறைப்பாடு செய்தார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் அவ்விடத்தில் பாதுகாப்பை ஏற்படுத்தினர். சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று அறிக்கை தாக்கல் செய்தனர். விசேட அதிரடிப்படையினரால், அந்த ரவைகளை அப்புறப்படுத்தி செயலிழக்கச் செய்யுமாறு நீதிவான் உத்தரவிட்டார். அதன்படி 608 ரவைகள் மீட்கப்பட்டன. அவை பயன்படுத்தமுடியாத அளவுக்கு பழுதடைந்துள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ப - 9,20,159)

# உரமானியம் வழங்கல்

முல்லைத்தீவு, ஒக்.15

முல்லைத்தீவு மாவட்டத்தின் விசுவமடு மேற்கு நெத்தலியாறு கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கு காலபோக நெற் செய்கைக்கான உரமானியம் நேற்றுமுன்தினம் விஸ்வமடு தொட்டியில் உள்ள கமநல சேவைகள் நிலையத்தின் உரக்களஞ்சியத்தில் வைத்து வழங்கப்பட்டது.

இதன்போது சுமார் எண்ணூறு ஏக்கருக்கு மேற்பட்ட நெற்பரப்பில் செய்கையில் ஈடுபடும் 250க்கும் மேற்பட்ட விவசாயிகள் முதற்கட்ட இலவச உரமானியத்தைப் பெற்றுக்கொண்டனர். (ப-ரி1)

# எக்ஸ் – கதிர் இயந்திரம் பழுது; நோயாளர்கள் பெரும் சிரமம்

## சாவ. மருத்துவமனையில் இந்த நிலை

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் எக்ஸ் - கதிர் இயந்திரம் பழுதடைந்துள்ளதால் நோயாளர்கள் தனியார் மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மருத்துவமனையில் செயற்பட்டு வந்த எக்ஸ் - கதிர் இயந்திரம் கடந்த இரு மாதங்களாக பழுதடைந்த நிலையில் உள்ளது. இதனால் விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறுவோர் எக்ஸ் - கதிர் எடுப்பதற்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். கிளினிக்குகளில் சிகிச்சை பெறுவோர் தனியார் மருத்துவமனையில் கட்டணம் எக்ஸ் - கதிர் எடுத்துச் செலுத்திப் பெற்று மருத்துவர்களிடம் சமர்ப்பிக்கின்றனர். மருத்துவமனையில் இப் பிரிவு இயங்கியபோது மந்திகை ஆதார மருத்துவமனை, பளை மருத்துவமனை, மிருசுவில், வரணி, பூநகரி மருத்துவமனைகளிலிருந்து நோயாளர்கள் அழைத்து வரப்பட்டு எக்ஸ் கதிர் எடுத்துச் சென்றனர்.

விபத்துக்கள், தாக்குதல்கள் மற்றும் மரங்களிலிருந்து வீழ்ந்து காயமடைவோருக்கு சிகிச்சை அளிப்பதற்கு எக்ஸ் கதிர் அவசியம் என்னும் நிலையில் இயந்திரம் திருத்தப்படாமல் உள்ளமை குறித்து நோயாளர்கள் கவலை தெரிவித்தனர். (ப-9)

# 24 மணிநேரமும் ஒளிர்கின்றன வீதி விளக்குகள்

## சாவகச்சேரியில் இந்த நிலை.

சாவகச்சேரி, ஒக். 15

சாவகச்சேரி பிரதேச சபையால் கொடிகாமம் நகரிலிருந்து எழுதுமட்டுவாள் சந்தி வரை பொருத்தப்பட்ட வீதி விளக்குகள் 24 மணி நேரமும் அணைக்காமல் ஒளிர்கின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தொடர்ந்து ஒளிர்வதால் அவற்றில் 70 வீதமான மின்குமிழ்கள் பழுதடைந்துள்ளன என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது: கடந்த வருடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனால் ஒதுக்கப்பட்ட நிதியில் சாவகச்சேரிப் பிரதேசத்துக்குட்பட்ட பல இடங்களில் வீதி விளக்குகள் பொருத்தப்பட்டன. கொடிகாமம் தொடக்கம் எழுதுமட்டுவாள் சந்தி வரையான ஏ - 9 வீதியில் அவ்வாறு பெருமளவு மின்விளக்குகள் பொருத்தப்பட்டன. பொருத்தப்பட்ட காலம் தொடக்கம் அவற்றை அணைப்பதற்கு எவரும் முன்வராததால் அவை 24 மணி நேரமும் ஒளிர்ந்த நிலையில் காணப்படுகின்றன. மக்களின், வரிப்பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்தப்பட்ட வீதி விளக்குகளை இரவில் ஒளிரவிட்டு காலையில் அணைப்பதற்கு பிரதேச சபை முன்வரவில்லை. தமது வீட்டுக்கு முன்பாக வீதி விளக்குத் தேவையெனக் கோரி அவற்றைப் பெற்று பொருத்தியுள்ளோர், காலையில் அதை அணைப்பதற்கு விழிப்புணர்வு இல்லாமல் உள்ளனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ப-9)

# அரச பணியாளர் விபத்தில் காயம்

சாவகச்சேரி, ஒக். 15

கடமைக்கு வந்த மருத்துவமனைப் பெண் பணியாளர் விபத்துக்குள்ளாகி காயமடைந்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றது. அல்லாரை தெற்கைச் சேர்ந்த 50 வயதுடைய, சாவகச்சேரி மருத்துவமனையில் கடமையாற்றும் பெண் பணியாளரே விபத்துக்குள்ளானார். மோட்டார் சைக்கிளில் வந்த அவரை அதே வீதியில் வந்த பட்டா ரக வாகனம் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது. (ப-9)

# வறுமைக்கோட்டுக்கு உட்பட்டோருக்கு உணவுப் பொருள்கள் வழங்கல்




கொவிட்-19 தொற்றால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்டத்தில் உள்ள வறுமைநிலையில் வாழும் 800க்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உண வுப் பொதிகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் பிரதேச செயலக ரீதியில் வழங்கப்படுகின்றன.

மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலக பிரிவிலும் தெரிவுசெய்யப்பட்ட தலா 55 பேருக்கு சட்டத்திற்கும், மனித உரிமைகளுக்குமான நிலையத்தால் இந்தப் பொருள்கள் வழங்கப்படுகிறது.

கொவிட்-19 காலப் பகுதியில் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் வசியும் வறுமை நிலையில் வாழும் கர்ப்பவதிகள், மாற்றுத் திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் போன்றோருக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ப-9)

# நாட்டை மீட்டெடுப்பதற்கு அனைவரும் ஒன்றுபடுங்கள்

## அழைப்பு விடுகிறது சஜித் அணி

கொழும்பு, ஒக்.15

“நாடு ஏகாதிபத்தியப் பாதையை நோக்கிச் செல்கிறது. இந்தப் பாதையிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்காக அனைவரும் ஒன்றிணையவேண்டும்'' என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன தெரிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

அரசமைப்புக்கான 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு நிறைவேற்றப்பட்டால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அரசாங்கத்தின் உதவியாளர்களாகவே செயற்பட வேண்டிய நிலைமை ஏற்படும். 20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்ட வரைவை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுக்கள் தொடர்பில் உயர்நீதிமன்றம் பரிசீலனைகளை செய்திருந்தது. இது தொடர்பான தீர்ப்பை உயர்நீதிமன்றம் முதலில் ஜனாதிபதி மற்றும் சபாநாயகருக்கே தெரிவிக்கும். அவர்கள் ஊடாகத்தான் தீர்ப்புத் தொடர்பான தகவல்களை எமக்குப் பெற்றுக் கொள்ளமுடியும். ஆனால், இந்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு தற்போது சமூகவலைத்தளங்கள் ஊடாகப் பகிரப்பட்டு வருகின்றது. அது எவ்வாறு சமூகவலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளது. யார் அந்தத் தகவல்களை வழங்கியது? என்பது தொடர்பில் எந்தவித தகவலும் இல்லை. 'ஒரே நாடு ஒரே சட்டம்' என்று அரசாங்கம் கூறிவந்தா லும்,அதனை ஆளும் தரப்பினரே கடைப்பிடிக்கின்றார்களா என்பது சந்தேகமாகவே இருக்கின்றது. இது தான் நாட்டின் நிலைமை . இந்நிலையில் 20 ஆவது அரசமைப்பு திருத்தமும் நிறைவேற்றப்பட்டால் என்ன நடக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய தருணம் இது. அதனால் 19 ஆவது அரசமைப்புத் திருத் தத்தைப் பாதுகாப்பதற்காக அனைவரும் ஒன்றிணையுங்கள் - என்றார்.. (ஐ-இ)

# கொரோனாவை தண்டத்தால் கட்டுப்படுத்திவிட முடியாது

## விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள் என விஜித ஹேரத் எம்.பி தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.15

தண்டம் விதிப்பதன் மூலம் பலவந்தமாக கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதைவிட, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதே சிறந்ததாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தண்டம் விதிப்பதன் மூலம் வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் வாழ்வாதாரத்தில் மேலும் மேலும் நெருக்கடிகளையே எதிர்கொள்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பு நடைபெற்றது.

இதன்போது சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை மீறுபவர்களுக்கு எதிராக தண்டமும், 6 மாத கால சிறைத்தண்டனையும் விதிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

கொவிட்-19 வைரஸின் அபாயம் குறித்து மக்களைத் தெளிவுபடுத்துவதை அரசாங்கம் கைவிட்டமையாலேயே இரண்டாவது அலைக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. இரண்டாவது அலையால் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை ஆயிரத்தைக் கடந்துள்ளபோதிலும் அதன்மூலம் இதுவரையில் இனங்காணப்படவில்லை. அதனை துரிதமாக இனங்காண்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதேபோன்று பி.சி. ஆர். பரிசோதனை முடிவுகளை தாமதப்படுத்தாமல் துரிதமாக பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும். ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்தில் மக்களின் வாழ்வாதாரத்துக்கான நிவாரணங்களை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களுக்கேனும் 5000 ரூபா கொடுப்பனவை வழங்க வேண்டும்- என்றார். (ஐ-இ)

# பலமாடி வாகனத் தரிப்பிடம் அமைக்க அமைச்சரவை அனுமதி

கொழும்பு,ஒக்.15

கொழும்பு மற்றும் ஏனைய தெரிவுசெய்யப்பட்ட நகரங்களில் பல மாடி வாகனத் தரிப்பிடம் அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கொழும்பு நகரத்திலும், ஏனைய பிரதான நகரங்களிலும் வீதியில் இரு மருங்கிலும் வாகனங்களை நிறுத்தி வைப்பதால் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காகவே இந்த பலமாடி தரிப்பிடம் அமைக்கப்படவுள்ளது.

கொழும்பு நகரம் பத்தரமுல்லை, அநுராதபுரம், மற்றும் கண்டி, ஆகிய நகரங்களிலும், தெரிவு செய்யப்பட்ட 8 இடங்களில் இவை அமைக்கப்படவுள்ளன. (ஐ-இ)



# நோயாளர்களின் நலன் கருதி கொட்டகை அமைப்பு

சாவகச்சேரி,ஒக். 15

சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சிகிச்சைபெற வரும் நோயாளர்களின் நலன் கருதி புதிய கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது.

சிகிச்சை பெற வருபவர்களிடையே சமூக இடைவெளியை ஏற்படுத்தும் வகையில் நோயாளர்கள் கொட்டகையில் தங்க வைக்கப்பட்டு அங்கிருந்து ஒவ்வொருவராகச் சிகிச்சை பெற ஏற்பாடுகள் மேற்கொண்டுள்ளன என்று மருத்துவமனைப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஐ-9)

# சுதந்திர தின நிகழ்வுக்கான ஏற்பாட்டுக்கு குழு நியமிப்பு

கொழும்பு,ஒக்.15

இலங்கையின் 73 ஆவது சுதந்திர தின நிகழ்வுக்கான (2021) ஏற்பாடுகள் மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 8 பேர் அடங்கிய உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள இந்த உபகுழுவில் கல்வி அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன, அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல, உள்நாட்டலுவல்கள், உள்ளக பாதுகாப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச, மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும மற்றும் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-இ)

# நாட்டில் 6,190 பேருக்கு பி.சி.ஆர்.பரிசோதனை



கொழும்பு,ஒக்.15

கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காணும் நோக்கில், நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் 6 ஆயிரத்து 190 பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

கொரோனா பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மையம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாடளாவிய ரீதியில் இதுவரை மூன்று இலட்சத்து 42 ஆயிரத்து 342 பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-இ)

# 'கொவிட்- 19' கட்டுப்படுத்தலில் ஊடகங்களுக்கும் பங்குண்டு

## கெஹெலிய ரம்புக்வெல தெரிவிப்பு

கொழும்பு,ஒக்.15

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சுறுத்தல் காரணமாக, குறித்த வைரஸ் பரவலை தடுப்பதில் ஊடகங்களுக்கும் கூடுதலான பொறுப்பு உண்டு என்று அமைச்சரவை பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் ஊடக நிறுவனங்கள் ஆற்றும் பணிகளை வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பாராட்டியதுடன் மேற்படி தகவலையும் தெரிவித்தார்.

“மக்களின் தனியுரிமையை பாதுகாப்பது தொடர்பாக செய்தி அறிக்கையிடல் பற்றிய பொது வேலைத் திட்டத்தை தயாரிப்பது அவசியமாகும்.

ஊடகங்கள் அறிந்தோ அறியாமலோ மக்களின் தனியுரிமைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் செய்திகளை வெளியிட்டுள்ளன. தனி மனித உரிமை, நோய் என்பன பற்றி அறிக்கை



யிடும்போது வரையறையுடன் செயற்படுவது அவசியமாகும்.

இதுபற்றிய வழிகாட்டல் விரைவில் வெளியிடப்படும்” - என்றார். (ஐ-இ)

# மைத்திரி கூறுவது கற்பனை

## முன்னாள் பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு



**கொழும்பு, ஒக்.15**

**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, சஹ்ரான் ஹாசிம் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்கினேன் என இப்போது கூறினாலும், அவர் அவ்வாறான எந்த அறிவுறுத்தலையும் விடுக்கவில்லை என்று முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பாக ஆராயும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவில் நேற்றுமுன்தினம் சாட்சியமளித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுடன் தொடர்புபட்ட அமைப்பான தேசிய தௌஹீத் ஜமா அத்தின் தலைவர் சஹ்ரான் ஹாசிமைக் கைதுசெய்யுமாறு 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தேசிய பாதுகாப்புப் பேரவைக் கூட்டத்தில் அறிவுரை வழங்கினார் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருந்தார். அது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்தபோதே ஹேமசிறி பெர்னாண்டோ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்தகைய அறிவுறுத்தலை அவர் ஒருபோதும் தெரிவிக்கவில்லை என்று அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொழும்பு பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் சார்பில் முன்னிலையான சாமில் பெரேரா, "தேசிய பாதுகாப்பு பேரவைக் கூட்டம் 2019ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி நடைபெற்றதன் பின்னர், ஏப்ரல் 22ஆம் திகதிவரை ஏன் கூட்டப்படவில்லை?" என்று வினவினார்.

அதற்குப் பதிலளித்த ஹேமசிறி பெர்னாண்டோ, அதற்கான காரணம் எனக்குத் தெரியாது. தேசிய பாதுகாப்பு பேரவையை கூட்டும் முடிவை வழக்கமாக ஜனாதிபதியே எடுப்பார். அவர் சொன்னதை மட்டும் நான் செய்தேன். அதை நடத்தாதமைக்கான காரணம் என்னவென எனக்குத் தெரியாது. என்றார்.

சஹ்ரான் உட்பட ஒரு குழு பயங்கரவாத தாக்குதல்களை நடத்தும் என்பது தொடர்பான தகவல்கள் சிறிசேனவுக்கு ஏன் தெரிவிக்கப்படவில்லை? என்று கேட்கப்பட்டபோது, புலனாய்வுத் தகவல்கள் வழக்கம்போன்று தேசிய புலனாய்வுச் சேவையின் பணிப்பாளரால் வழங்கப்பட்டது என்று ஹேமசிறி பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

சட்டப்பின்னணியின்படி சில தகவல்கள் பற்றி அமைச்சின் செயலாளரால் அமைச்சருக்கு அறிவிக்கப்பட வேண்டும். ஆனால் பின்னர் நானும் தேசிய புலனாய்வு சேவையின் பணிப்பாளரும் புலனாய்வு தொடர்பான தகவலை சிறிசேனவுக்கு வழங்க வேண்டும் என்ற உடன்பாட்டுக்கு வந்தோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

# கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு ஏற்பாடு

கொழும்பு,ஒக்.15

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில், நாடாளுமன்றத்தில் 5 நாள்கள் விவாதம் கோருவதற்கு, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

பிற்பகல் 1.30 மணிக்கு சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெறும் கூட்டத்தில், நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் பங்கேற்கவுள்ளனர்.

இதன்போது 20 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தில் 5 நாள்கள் விவாதத்தை, ஐக்கிய மக்கள் சக்தி கோரவுள்ளது. எனினும், இரு நாள்கள் விவாதத்தை வழங்குவதே, அரசின் நிலைப்பாடாக இருக்கின்றது என்று தெரியவருகின்றது.

அதேவேளை, அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான உயர் நீதிமன்றத்தின் சட்ட வியாக்கியானத்தை எதிர்வரும் 20 ஆம் திகதி சபாநாயகர் அறிவிக்கவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-44)

# போதையில் சாரத்தியம்: ஐவருக்குத் தண்டம்

சாவகச்சேரி ஒக். 15

ஆவணங்களின்றி மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 77 ஆயிரத்து 500 ரூபாவும், மதுபோதையில் வாகனம் செலுத்திய மேலும் நால்வருக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் ஒரு லட்சம் ரூபாவும் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் தண்டமாக விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸாரால் மதுபோதையில் சாரதி அனுமதிப் பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப்பத்திரம் ஆகியவையின்றி வாகனம் செலுத்திய நபர் மற்றும் மதுபோதையில் வாகனம் செலுத்திய நால்வருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டன. சாரதிகள் குற்றத்தை ஏற்றுக்கொண்டதை அடுத்தே மேற்படி தண்டம் விதிக்கப்பட்டது. (ம-9)

# நெல்லியடியில் நிறுவனத்தின் காணியில் 5 மாடி பசுமைக் கிளையைத் திறந்துவைத்தது செலிங்கோ லைஃப்




செலிங்கோ லைஃப் தனது புதிய பசுமைக் கிளையை, நெல்லியடியில் திறந்து வைத்துள்ளது. பிரத்தியோகமாக வடிவமைக்கப்பட்ட ஐந்து மாடிக் கட்டடமாக இது அமைந்துள்ளதோடு, யாழ்ப்பாணக் குடாநாட்டில் நிறுவனத்தின் காணியில் அமைக்கப்பட்ட மூன்றாவது கட்டடமாகவும் இது அமைந்தது. அத்தோடு, வடமராட்சிப் பிராந்தியத்தில் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட முதலாவது கட்டடமாகவும் இது அமைந்துள்ளது.

சூழலுக்கு நேயமான இக்கட்டடம், இல. 293, பருத்தித்துறை வீதி, நெல்லியடி என்ற முகவரியில், 8,692 சதுர அடி நிலப் பரப்பில் அமைந்துள்ளதோடு, நாடு முழுவதிலும் நிறுவனத்தின் காணியில் அமைக்கப்பட்ட செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் 38ஆவது கிளையாகவும் இது அமைந்துள்ளது.

ஆயுள் காப்புறுதியின் முன்னணி நிறுவனமான செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் "பசுமைக் கட்டடம் (Green Building)" என்ற கருது கோளுக்கு ஏற்ப நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இக்கட்டம், இயற்கை ஒளியை அதிகூடிய அளவில் பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டு, கிளை முழுவதுமாக சூரியக் கலத்தால் சக்தியளிக்கப்பட்டுள்ளதோடு, தனக்கெனத் தனியான கழிவு மீள்சுழற்சிக் கட்டமைப்பையும் கொண்டுள்ளது. அதேபோன்று, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய, சக்தியைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் மின்விளக்குகள், வளிச் சீராக்கிக் கட்டமைப்புகள் (air conditioning systems) ஆகியவற்றையும் இது கொண்டுள்ளதோடு, மழை நீரைச் சேகரிக்கும் வசதியொன்றையும் கொண்டுள்ளது.

புதிய கட்டடத்தின் சம்பிரதாயபூர்வத் திறப்பு விழா, செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் தலைவர் திரு. ராஜ்குமார் ரெங்கநாதன் தலைமையின் இடம்பெற்றதோடு, பணிப்பாளர்களும் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர்.

250க்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்டு, இலங்கையின் ஆயுள் காப்புறுதித் தொழிற்றுறையில் மிகப்பெரிய வலையமைப்பாக, செலிங்கோ லைஃப் செயற்படுகிறது. நாட்டின் 25 மாவட்டங்களிலும் நகரங்கள், கிராமங்கள் என, 142 பகுதிகளில், அதன் பிரசன்னத்தை, செலிங்கோ லைஃப் கொண்டுள்ளது.




Nelliyady Branch Building



Solar panels fixed and the rain water harvesting facility



Customer Service area



Ceylinco Life Chairman Mr R. Renganathan unveiling the opening plaque



Ceylinco Life Chairman Mr R. Renganathan and MD/CEO Mr. Thushara Ranasinghe along with the branch teams cutting the ribbon.



Audience at the opening ceremony in the multi-function room, which can accommodate more than 60 people.



Ceylinco Life Chairman Mr R. Renganathan addressing the audience



Ceylinco Life Managing Director / Chief Executive Officer Mr. Thushara Ranasinghe addressing the audience



Ceylinco Life Manager Business Development Mr. T.Nirojan addressing the audience

# இன்றைய நாள்

**மேடம்:** முக்கியமான செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வளர்ச்சி பெற முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். பணப்பரிவர்த்தனை அதிகரிக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.

**இடபம்:** உறவினர்களிடம் விரக்தியுடன் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் தேவை. நிலுவைப்பணம் வசூலாகும். ஒவ்வாத உணவைத் தவிர்க்கவும்

**மிதுனம்:** மனதில் உறுதி நிறைந்திருக்கும். எதிரியால் தொந்தரவு விலகும். தொழில், வியாபாரம் வளர்ச்சிகாண கூடுதலாக பணிபுரிவீர்கள். கூடுதல் வருமானம் கிடைக்கும். அறப்பணி செய்து மகிழ்வீர்கள்.

**கடகம்:** அண்டை வீட்டார் அன்பு பாராட்டுவர். எதிர்கால வாழ்வில் நம்பிக்கை கொள்வீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். தாராள பணவரவு கிடைக்கும். ஒற்றுமையும், மகிழ்ச்சியும் அதிகரிக்கும்.

**சிம்மம்:** மனதில் குழப்பம் ஏற்படலாம். அனுபவத்தை பாடமாகக் கருதி செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் உருவாகும். செலவுக்கேற்ற பணவரவு கிடைக்கும்.

**கன்னி:** சிலர் பயனற்ற வகையில் பேசுவர். சொந்தப்பணியில் அக்கறை காட்டுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட தடைகளை சரி செய்வீர்கள். சீரான பணவரவு கிடைக்கும். வாகனத்தில் மிதவேகம் தேவை.

**துலாம்:** பெரியோர்களின் சொல்லுக்கு மதிப்பு தருவீர்கள். தாமதமான பணி புதிய முயற்சியால் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் செய்வீர்கள். உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** மனதில் புத்துணர்வு ஏற்படும். குடும்பத்தினர் ஆதரவாக இருப்பர். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். வெகுநாட்களாக தேடிய பொருள் கிடைக்கும்.

**தனுசு:** குடும்பத் தேவைகளில் கவனம் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மாறுபட்ட தன்மை இருக்கும். வரவை விட செலவு அதிகரிக்கும். உணவு கட்டுப்பாடு நல்லது.

**மகரம்:** முன்யோசனையுடன் செயல்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் அனுகூலம் பாதுகாக்கப்படும். சிக்கனம் அவசியம். தாய்வழி உறவினரால் நன்மை உண்டு.

**கும்பம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை பெறுவீர்கள். செயல்கள் சிறப்பாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி ஏற்படும்.

**மீனம்:** மனதில் சஞ்சலம் உருவாகலாம். பணி நிறைவேற்றுவதில் தாமதம் இருக்கும். தொழில், வியாபார வழக்கில் நண்பரின் ஆலோசனை உதவும். சீரான பணவரவு கிடைக்கும்.

# உறவுகளை மேலும் பலப்படுத்துவதற்கு சகல ஒத்துழைப்பையும் வழங்குவோம்

## ரஷ்ய தூதுவர் யூரிமதேரி தெரிவிப்பு



ரஷ்யாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நீண்டகாலமாக இருக்கும் நல்லுறவு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு ஆகியவற்றை மேலும் பலப்படுத்துவதற்கு வழங்கக் கூடிய சகல ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு ரஷ்யா தயாராகவுள்ளது என்று இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரிமதேரி தெரிவித்தார்.

மின்சார அமைச்சர் டலஸ் அழகப்பெருமவுடன் நடைபெற்ற உத்தியோகபூர்வ சந்திப்பின்போது அவர் மேற்படி கருத்தைத் ரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கை மின்சாரத்துறையின் அபிவிருத்திற்காக அணுசக்தி தொழில்நுட்ப அறிவை பெற்றுக்கொடுப்பதற்கான கலந்துரையாடல்கள் ஏற்கனவே நடைபெற்றதோடு ரஷ்ய நாட்டு அணுசக்தி ஆணைக்குழு மூலம் இலங்கை மின்சார சபைக்கு அறிவு, பயிற்சி உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் வழங்குவதற்கு எமது நாடு தயாராகவுள்ளது என ரஷ்ய தூதுவர் தெரிவித்துள்ளார்.

திடமான அபிவிருத்தி நோக்கங்களுக்கமைய செயல்படும் தற்போதைய அரசாங்கம் இலங்கை மின்சாரத் துறையை நடத்திச் செல்ல மேற்கொள்ளவுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பாக ரஷ்ய தூதுவருக்கு தெரிவித்த மின்சார அமைச்சர் டலஸ் அழகப்பெரும, மீள் பிறப்பாக்க சக்தியினூடாக மின்சார உற்பத்தியின் தேவையையும் சுட்டிக்காட்டினார்.

மேலும் இலங்கை மின்சாரத்துறையின் அபிவிருத்திற்காக ஒத்துழைப்பு வழங்குவதற்கு முன்வந்தமை தொடர்பாக ரஷ்யத் தூதுவருக்கு அமைச்சர் டலஸ் அழகப்பெரும தனது நன்றியையும் தெரிவித்தார். (ந-இ)

# குளத்திலிருந்து வயல்களுக்கு நீர்

கிளிநொச்சி,ஒக்.15

பருவகால மழை பெய்யாமையால், அக்கராயன் குளத்திலிருந்து, வயல்களுக்கு நீர் பாய்ச்சும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அக்கராயன் குள நீர்பாசனத்துக்குட்பட்ட வயல்களில் நெற்செய்கையாளர்கள் காலபோகத்துக்குரிய நெற்பயிர்ச்செய்கையை ஆரம்பித்தனர்.

நெல் விதைக்கப்பட்டு, பயிர்கள் முளைக்க ஆரம்பித்துள்ள நிலையில், வயல்கள் வறண்டு காணப்படுகின்றன.

பருவகால மழை பிந்திய காரணத்தால், பயிர்கள் அழிவடையும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ளன.

அதனையடுத்து அக்கராயன் குளத்திலிருந்து வயல்களுக்கு நீர் திறந்து விடப்பட்டுள்ளது. (க-ரி1)



# ரிஷாத்தை கைதுசெய்யும் முயற்சி முஸ்லிம்களைச் சீண்டும் செயல்

## முஸ்லிம் காங்கிரஸ் காட்டம்

கொழும்பு, ஒக்.15



ரிஷாத்தை கைதுசெய்வதற்கு ஆணை பிறப்பித்துள்ளமையானது முஸ்லிம்களை சீண்டிப்பார்க்கும் செயல் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.எல்.எம். நஸீர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில், அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் மக்கள் தங்களுக்குப் பெரும் ஆதரவைத் தரவில்லை என்ற காரணத்தால் இப்போது அதற்கான பழிவாங்கல் நடவடிக்கைகளைத் தற்போதைய அரசு மேற்கொண்டு வருகின்றது. அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனை கைதுசெய்வதற்கு சட்டமா அதிபர் ஊடாக அரசு ஆணை பிறப்பித்துள்ளமையை முஸ்லிம்களை சீண்டிப்பார்க்கும் ஒரு செயற்பாடாகவே கொள்ள வேண்டியுள்ளது. இது ஓர் ஜனநாயக நாடு. ஜனநாயகமான ஓர் அரசு என்றால் இவ்வாறான பழிவாங்கும் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-22)

# பல்கலைக்கழகங்களை மூடத் தீர்மானமில்லை

கொழும்பு, ஒக். 15

கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் பல்கலைக்கழக கட்டமைப்பை மூடுவதற்கு எந்தவித ஏற்பாடுகளும் இல்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்ததாவது:

தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்கள் மற்றும் உயர்தர பரீட்சை மாணவர்கள் கொரோனாத் தொற்று சவாலுக்கு மத்தியில் தமது பரீட்சை நடவடிக்கைகளில் ஈடுபடும் போது பொழுது பல்கலைக் கழகங்களை மூடுவது நடைமுறைச் செயற்பாடு அல்ல என்றும் அவர் மேலும் கூறினார். (ஒ-இ)

# கொழும்பு தேசிய மருத்துவமனை தாதிக்கும் கொரோனா

கொழும்பு, ஒக். 15

கொழும்பு தேசிய மருத்துவமனையில் பணிபுரியும் தாதியொருவர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியமை பி.சி.ஆர். பரிசோதனைகளில் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனையின் விபத்து தீவிர சிகிச்சைப் பிரிவில் பணியாற்றும் தாதிக்கே தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அவருக்கு எவ்வாறு கொரோனாத் தொற்று ஏற்பட்டது என்பது இன்னமும் கண்டறியப்படவில்லை. (ஒ-இ)

தனிப்பட்ட குரோதத்தால்

# தீ மூட்டப்பட்ட ஆடைத் தொழிற்சாலை; பலகோடி ரூபா பெறுமதியான பொருள்கள் நாசம்

பண்டாரவளை, ஒக்.15
பண்டாரவளையிலுள்ள ஆடைத் தொழிற்சாலையொன்று விஷமி ஒருவரால் தீ வைக்கப்பட்டு முழுவதுமாகத் தீக்கிரையாகியுள்ளது. நேற்று அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தொழிற்சாலை எரிவதைக் கண்ட நபரொருவர் அப் பகுதி மக்களுக்கு தெரிவித்துள்ளார். அதையடுத்து அங்கு அயலவர்கள் ஓடிவந்தபோது தீ பந்தத்துடன் ஒருவர் ஓடியுள்ளார். அவரைப் பிடித்த பொதுமக்கள் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். அவர் அரசாங்க ஊழியர் எனவும் தனிப்பட்ட குரோதம் காரணமாக இதைச் செய்துள்ளார் எனவும் தெரியவருகிறது. தீப்பரவல் காரணமாக, இவ் ஆடைத் தொழிற்சாலையிலிருந்து தைத்து நிறைவுசெய்யப்பட்டு வெளிநாடொன்றுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருந்த உடைகள், உபகரணத் தொகுதிகள் அனைத்துமே தீக்கிரையாகி யுள்ளன. இவற்றின் பெறுமதி பல கோடி ரூபாக்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது. (வ-இ)



# கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் 20 ஐ நிறைவேற்ற துடிக்கும் அரசு

## ரஞ்சித் மத்தும பண்டார அதிருப்தி

கொரானா, ஒக்.15
**கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் அரசமைப்புக்கான 20 ஆவது திருத்த சட்டவரைவை நிறைவேற்றிக்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் முயற்சித்து வருகின்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் , நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்தும பண்டார அதிருப்தி வெளியிட்டுள்ளார்.**



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஏனைய உலக நாடுகள் வைரஸ் தொற்றிலிருந்து நாட்டு மக்களைப் பாதுகாக்க தடுப்பூசிகள் கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றன. ஆனால் இந்நாட்டு அரசாங்கம் அரசமைப்பு திருத்தம் தொடர்பிலே கவனம் செலுத்தி வருகின்றது.

20 ஆவது அரசமைப்பு திருத்த சட்ட வரைபு நிறைவேற்றப்பட்டால் நாடு முடியாட்சி முறைக்குச் செல்லும் என்றும், தற்போது 20 ஆவது சட்ட வரைபுக்கு எதிராக அமரபுர, ராமான்ய பீடத்து தேரர்கள் தங்களது கருத்தைத் தெரிவித்தது போன்று, ஏனைய பீடங்களும் அவர்களது நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (வ-இ)

# ஜாலிய சேனாரத்னவின் இடமாற்றம் திடீர் ரத்து

கொழும்பு, ஒக்.15
சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்னவின் வடக்குக்கான இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.



அவர் பொலிஸ் பொது மக்கள் தொடர்பாடல் பிரிவின் பணிப்பாளராகவும் ஊடகப் பேச்சாளராகவும் கடமையாற்றி வந்தார்.

இந்நிலையில் ஒழுக்காற்று நடவடிக்கையின் பிரகாரம், அவர் வட மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் தனிப்பட்ட உதவியாளராக காங்கேசன்துறை பொலிஸ் வலயத்துக்கு இடமாற்றப்படுகிறார் எனப் பொலிஸ் ஆணைக்குழு அறிவித்திருந்தது. இந்நிலையில், அந்த இடமாற்றம் ரத்து செய்யப்படுகிறது என அதே ஆணைக்குழு மீள அறிவித்துள்ளது.

அதன்படி அவர் பொலிஸ் தலைமையகத்தின், பொலிஸ் மா அதிபரின் கொவிட் 19 கட்டுப்பாட்டறைக்கு மாற்றப்பட்டுள்ளார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ள ரியாட் பதியுதீன் விவகாரத்தில், ஜாலிய சேனாரத்ன வெளியிட்ட கூற்றுக்கள் பல ராலும் விமர்சிக்கப்பட்டன.

இது தொடர்பில் நாடாளுமன்றில் உள்ளகப் பாதுகாப்பு விவகார இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ச, பொலிஸ் பேச்சாளருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என கூறியிருந்தார்.

இந்தப் பின்னணியிலேயே, அவர் பொலிஸ் பேச்சாளர் பதவியிலிருந்து மாற்றப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# ஷாபியின் மனு தொடர்பில் மார்ச் ஒன்றில் விசாரணை

கொழும்பு, ஒக்.15
அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்று தெரிவித்து மருத்துவர் ஷாபியால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மீதான விசாரணை எதிர்வரும் மார்ச் முதலாம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. குற்றச்சாட்டுக்கள் எவையுமின்றி பொலிஸார் தன்னைத் தடுத்து வைத்ததன் ஊடாகத் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என்று மருத்துவர் ஷாபி மனுத் தாக்கல் செய்திருந்தார். கருச்சிதைவு மேற்கொண்டதாகத் தன்மீது போலியான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருந்தன என்று அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கின் பிரதிவாதிகளாகக் குருணாகல் குற்றத்தடுப்பு பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் பரிசோதகர் புஷ்பலால், குருணாகல் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, பிரதி பொலிஸ்மா அதிபர் கித்சிறி ஜயலத், குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷாணி அபேசேகர, பாதுகாப்புச் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். இந்த மனு பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான எல்.டி.பி.உபுல்தெனிய, பிரீதி பத்மன் சூரசேன ஆகியோர் முன்னிலையில் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. பதில் மனுத்தாக்கல் செய்யப்படாததால் இந்த வழக்கு விசாரணை எதிர்வரும் மார்ச் மாதம் வரையில் ஒத்திவைக்கப்படுகின்றது என்று நீதியரசர் குழாம் அறிவித்தது. (எ-இ)

# கணவன் தாக்கியதில் மனைவி உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.15
கணவன் கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் மனைவி உயிரிழந்த சம்பவம் பன்னல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெக்கில்லபிட்டியவில் இடம்பெற்றுள்ளது.

இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்த நிலையிலேயே, மனைவியைக் கொலை செய்துவிட்டு கணவன் தப்பிச் சென்றுள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அந்தப் பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய பெண்ணொருவரே கொலை செய்யப்பட்டுள்ளார். (வ-இ)

# மருத்துவமனைகளில் 251 படுக்கைகளே மீதம்

கொழும்பு, ஒக்.15
புதிய கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கக்கூடிய 251 படுக்கைகள் மட்டுமே மருத்துவமனைகளில் கைவசம் உள்ளன என கொரோனாத் தொற்று பரவலைத் தடுப்பதற்கான தேசிய நடவடிக்கை மையத்தின் நேற்றுமுன்தின புள்ளிவிபரங்கள் தெரிவித்துள்ளன.

தற்போது, மருத்துவமனைகளில் மொத்தம் ஆயிரத்து 691 படுக்கைகள் உள்ளன. அவற்றில் 251 படுக்கைகளே மீதமுள்ளன. நிலைமையைப் பொறுத்து புதிய கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க சுகாதார அதிகாரிகள் ஏற்கனவே 147 மருத்துவமனைகளை அடையாளம் கண்டுள்ளனர். இவற்றில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு இடமளிக்க முடியும் எனத் தெரியவருகிறது. (வ-இ)

# பொலிஸ் கண்காணிப்பிலிருந்த இளைஞன் உயிரிழப்பு

கொழும்பு, ஒக்.15
பூகொட பொலிஸாரின் கண்காணிப்பிலிருந்த 21 வயதுடைய இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். போதைப் பொருள் தொடர்பான குற்றத்துக்கான அந்த இளைஞர் கடந்த ஞாயிறு கைதுசெய்யப்பட்டிருந்தார் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

திடீர் உடல் நலக் குறைவு ஏற்பட்டதையடுத்து ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சை பல[illegible] உயிரிழந்துள்ளார். (வ-இ)



இன்று சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்

# பக்கபலமாக இருப்போம்

றியானா

ஒக்ரோபர் 15. உலக வெள்ளைப் பிரம்பு தினம். வெள்ளைப் பிரம்பு என்பது கட்புலனற்றவர்களின் அசைவையும், திசையையும் பூர்த்தி செய்கின்ற கருவியாகும். இது கட்புலனற்றவர்களின் அடையாளக் குறியீடாகவும் கணிக்கப்படுகின்றது.

கட்புலனற்றவர்களின் தாழ்வு மனப்பான்மையை குறைக்கும் அதேநேரத்தில், அவர்களுக்கு பாதுகாப்பு உணர்வையும், சுய அபிமானத்தையும், சுயாதீனத்தன்மை பற்றிய உணர்வையும் வெள்ளைப் பிரம்பு உறுதிப்படுத்துகின்றது.

உலகளாவிய ரீதியில் 20.5 மில்லியனுக்கு அதிகமான மக்கள் கட்புலன் அற்றவர்களாக உள்ளனர். கட்புலனற்றவர்களின் இத்தகைய தனித்துவமான கருவியான வெள்ளைப் பிரம்பை அடிப்படையாகக் கொண்டு ஒக்ரோபர் 15ஆம் திகதி சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கண்பார்வையற்றவர்கள் மீது கண்பார்வையுள்ள மக்களின் கண்களைத் திறப்பதன்மூலம் கட்புலனற்றவர்கள் முகம்கொடுக்கின்ற சமூக, பொருளாதார, கலாசார, சூழலியல் சிக்கல்களையும் தடைகளையும் அகற்றுவது இந்த தினத்தின் நோக்கமாகும்.

### வழிகாட்டி

சர்வதேச வெள்ளைப் பிரம்புதினம் 1961ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இதன் பின்னணி இரண்டாம் உலகப் போருடன் தொடர்புடையது. பெரும் அழிவுகளை ஏற்படுத்திய இரண்டாம் உலகப் போர் முடியும் தருணம் அது. அணுகுண்டுகள் வீசப்பட்டு அந்தப் போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது.

அணுகுண்டுகள் வீசப்பட்ட ஜப்பானின் ஹிரோஷிமா, நாகசாகி நகரங்களில் தற்போதும் கூட அதன் தாக்கம் இருக்கின்றது. அங்கு குழந்தைகள் பல குறைபாடுகளுடனேயே பிறக்கின்றன. அவற்றில் முக்கியமானது கண்பார்வை அற்ற குழந்தைகளின் பிறப்பு.

அந்தக் காலகட்டத்தில் ஜப்பானில் இந்தப் போரால் கண் பார்வை பாதிக்கப்பட்ட பலர், அங்கு பிரபலமாக இருந்த மருத்துவர் கெய்யை நாடினர். தன்னைத் தேடி வந்தவர்களில் பெரும்பாலானவர்களுக்கு கெய்யால் பார்வையைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. கண் பார்வை இழந்து தவித்தவர்களை சமூகத்தில் தடையின்றி நடமாட வைக்கவேண்டும் என்று எண்ணினார் கெய். அதன் மூலம் உருவான எண்ணக்கருவே இந்த வெள்ளைப்பிரம்பு.

### அடையாளம்

வெள்ளைப் பிரம்பு தற்காலத்தில் கட்புலனற்றவர்களின் அடையாளமாக மாற்றம் பெற்றுவிட்டது. கட்புலனற்றவர்கள் வேறொருவரின் துணையின்றி தாமாகச் செயலாற்றுவதற்கு வெள்ளைப் பிரம்பு பேருதவி புரிகின்றது.

கட்புலனற்றவர்கள் நவீன யுகத்தில் அனைத்துத்துறைகளிலும் சிறப்பாக துலங்குகின்றனர். சாதாரண மனிதர்கள் போன்று அவர்களும் செயலாற்றுகின்றனர். பல்கலைக்கழகம் வரை சென்று கற்கின்றனர், மேற்படிப்புப் படிக்கின்றனர். அவர்களின் முயற்சி அதற்கு ஒருகாரணம் என்றாலும், இவற்றுக்கு வெள்ளைப் பிரம்பும் பிரதான காரணம் என்றும் கூறலாம்.

### வெள்ளை பிரம்பு சொல்லும் செய்தி

வெள்ளைப் பிரம்பு தினம் உலகுக்குச் சொல்லும் செய்தி, "வெள்ளைப் பிரம்போடு செல்பவருக்கு உங்களால் முடிந்தவரை உதவுங்கள் அல்லது அவர்கள் தடையின்றிச் செல்வதற்கு வழிவிட்டுக் கொடுங்கள். உங்கள் வாகனங்களை அவர்களுக்கு இடையூறு இன்றி நிதானமாகச் செலுத்துங்கள்" என்பதாகும்.

வெள்ளைப் பிரம்பை வைத்திருப்பவர், அதை நான்காக மடித்து வீதியில் குறுக்கே காட்டினால் அவர் ஏதாவதொரு வாகனத்தை நிறுத்துவதற்கு முயல்கிறார் என்பதாகவும், இரண்டாக மடித்து வீதியின் குறுக்கே காட்டினால் வீதியைக் கடக்க முயல்கிறார் என்பதாகவும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

கட்புலனற்றவர்களும் எம் சக மனிதர்களே. அவர்களுக்கும் சமூகத்தில் சமவுரிமை வழங்கப்பட வேண்டும். நாம் அவர்களுக்கு துணையாக இருக்க வேண்டும். பார்வையீனம் இயற்கையாக அமையலாம். அன்றேல் விபத்துக்கள், நோய்கள் காரணமாக அமையலாம். அற்புதமான கண்கள் கொண்டவர்களின் செயலும் அற்புதமாக இருக்க வேண்டும்.

### கைகோர்ப்போம்

உயர்ந்த இலட்சியங்களோடும் உன்னத உறுதியோடும் வாழ்க்கைப் பாதையில் அடியெடுத்து வைக்கின்ற எவரும் தோல்வி காண்பதுமில்லை; துவண்டுபோவதுமில்லை. கட்புலனற்றோருக்கு வெள்ளைப் பிரம்பு தினத்தில் தரப்படுகின்ற செய்தி இதுதான்.

அவர்களின் பயணத்தில் கைகோர்த்து உற்ற துணையாய் இருப்பது அனைவரதும் கடமை. இந்தத்தினத்தில் அவர்களின் முன்னேற்றத்துக் காகச் சிந்திப்பதுடன், ஒவ்வொருவரும் ஒரு வெள்ளைப் பிரம்பை தேவையுடையோருக்கு வழங்குவோம்.

sஇப்போது போக்குவரத்துத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் உடல் உறுப்பு தானம் செய்யும் நடைமுறை இலகுபடுத்தப்பட்டுள்ளது. சாரதி அனுமதிப் பத்திரத்தில் அது உள்ளடக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் புதுப்பிக்கும் போது அதை உள்ளடக்கி விண்ணப்பிக்க முடியும்.



# '20' நிறைவேறினால் ஈழக்கனவு நனவாகும்

## புதுக்கதை விடுகிறது சஜித் அணி

கொழும்பு, ஒக். 15

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவு ஊடாக இரட்டை குடியுரிமை கொண்டவர்களுக்கு நாடாளுமன்றம் வருவதற்கு அனுமதி வழங்கினால் அது புலம்பெயர் புலி உறுப்பினர்களுக்கு வாய்ப்பாகிவிடும் என்று சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப்பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றம் செல்வதற்கான ஏற்பாடும் 20 ஆவது திருத்தச்சட்ட வரைவில் முன்மொழியப்பட் டுள்ளது. பஸில் ராஜபக்ச அல்லது வேறு எவருக்காவது நாடாளுமன்றம் வரவேண்டுமெனில், நாடு மீது அவர்களுக்கு உண்மையான பற்று உள்ளதெனில் இரட்டைக்குடியுரிமையை துறந்துவிட்டு தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் வரலாம். ஆனால் தேசப்பற்றாளர்களாக தம்மை அடையாளப்படுத்திக்கொள்ளும் அவர்களால் ஏன் வெளிநாட்டு பிரஜாவுரிமையை கைவிடமுடியவில்லை?

புலம்பெயர் புலி உறுப்பினர்களில் பலர் ஐரோப்பிய நாடுகளில் பிரஜாவுரிமை கொண்டுள்ளனர். இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் நாடாளுமன்றம் செல்லமுடியும்என்றஏற்பாடுநிறைவேறினால் அவர்களும்நாடாளுமன்றம்வரக்கூடும். ஏனெனில் இந்த அரசு தெற்கில் இனவாதத்தை விதைத்துள்ளது. இதனால் வடக்கில் அவர்களும் இனவாதத்தை உருவாக்கக்கூடும். விக்னேஸ்வரன் நேற்று நாடாளுமன்றத்துக்கு வந்து நாடகமாடிக்கொண்டிருக்கிறார். அவரைப்போல 10 பேர் வந்தால் என்ன நடக்கும்? பிரபாகரனால் போரால் செய்யமுடியாமல் . போனதை அரசமைப்பின் ஊடாக செய்வதற்கு ஆட்சியாளர்கள் 20 ஊடாக களம் அமைத்துக்கொடுக்கின்றனரா, நாட்டை பிரிப்பதற்கான சூழ்ச்சியா இது என்று கேட்கவிரும்புகின்றோம், என்றார். (ஒ.44)

# நானாட்டன் பிரதேசத்தில் நெல் கொள்வனவு ஆரம்பம்

**மன்னார், ஒக்.15**

**மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலக பிரிவில் உள்ள களஞ்சியங்களில் காலபோகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் களஞ்சியப்படுத்தப்பட்டிருக்கின்றபோதும் சிறுபோகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல் கடந்த திங்கட்கிழமை முதல் கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது என நானாட்டான் பிரதேச செயலாளர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் தெரிவித்தார்.**

முருங்கன் பகுதியிலுள்ள செம்மண்தீவு பகுதியில் இயங்கிவரும் உலர் உணவு நிறுவனத்தின் களஞ்சியப் பகுதியில் வைத்து நெல் சந்தைப்படுத்தும் சபையினால், ஒரு கிலோ நெல் 50 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவில் சிறுபோகத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல், கொள்வனவு செய்யப்படாது இருப்பதாக விவசாயிகளினால் முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையிலேயே தற்பொழுது இந் நெல் கொள்வனவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை முருங்கன் நெல் களஞ்சியசாலையில் சென்ற காலபோக அறுவடையில் கொள்வனவு செய்யப்பட்ட 150 மெற்றிக் தொன் நெல்லும் இருப்பில் இருந்து வருகிறது.

இந்த நிலையிலேயே நானாட்டான் பகுதியில் சிறுபோக நெற்செய்கையில் அறுவடை செய்யப்பட்ட நெல் தற்போது கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது என நானாட்டான் பிரதேச செயலாளர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் தெரிவித்தார். (ந-60)



# வயல் விழாவும் பயிர் நடுகையும்

மட்டக்களப்பு, ஒக்.15

உலகவங்கியின் நிதி உதவியில் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மத்தி விவசாயப் பிரிவிலுள்ள கரடியனாறு உறுகாமம் கிராமத்தில் செய்கை பண்ணப்பட்ட உப உணவு மறுவயல் பயிர் அறுவடையும் தானியப் பயிர் நடும் நிகழ்வும் கடந்த செவ்வாய்கிழமை நடைபெற்றன.

இதன்போது காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் விவசாயி களுக்கு முழு மானியமாக வழங்கப்பட்ட உதவியினூடாக செய்கை பண்ணப்பட்ட பயிர்களின் அறுவடையும் அதனைத் தொடர்ந்து பயிர் நடுகை ஆரம்ப நிகழ்வும் இடம்பெற்றன.

உதவி விவசாயப்பணிப்பாளர் கே.கருணாகரன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், மாவட்ட பிரதி விவசாய பணிப்பாளர், உதவி விவசாய பணிப்பாளர், சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு அதிகாரி, விவசாய போதனாசிரியர், விவசாய பாடவிதான உத்தியோகத்தர், விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் என பலர் கலந்துகொண்டனர். (ந-46)

# உரமானிய விநியோகம்

யாழ்ப்பாணம், ஒக்.15

இருபாலை தெற்கு கமக்கார அமைப்பின் ஊடாக வழங்கப்படும் உரமானியம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் உரும்பிராய் கமநல சேவைகள் நிலையத்தில் விநியோகிக்கப்படவுள்ளது.

எனவே உரமானியத்தைப் பெறவரும் விவசாயிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட டோக்கன், ஏக்கர் வரி கட்டிய பற்றுச்சீட்டு என்பவற்றுடன் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

உரமானியம் பெறுவதற்கான டோக்கன்கள் கல்வியங்காடு புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள கமக்கார அமைப்பின் தலைவரது இல்லத்தில் வைத்து நேற்று புதன்கிழமை வழங்கப்பட்டன என கமக்கார அமைப்பின் செயலாளர் ந.கஜேந்திரகுமார் அறிவித்துள்ளார். இவ்வேளை உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந)





ஓட்டமாவடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.தாரிக் தலைமையில் ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம், தம்புள்ளை வியாபார மத்திய நிலையம், கம்பஹா மாவட்டத்துக்கு சென்று வந்தோர் மற்றும் சிகை அலங்காரம் செய்பவர்கள் உட்பட 25 பேருக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனைகள் இடம்பெற்றன. (ந-150)

# ஊடகவியலாளர்கள் தாக்குதல்: நீதியான விசாரணை வேண்டும்

*பிரதி பொலிஸ்மா அதிபரிடம் கிளிநொச்சி ஊடக அமையம் வலியுறுத்து*

கிளிநொச்சி, ஒக்.15

முல்லைத்தீவு ஊடகவியலாளர்கள் இருவர் தாக்கப்பட்ட விடயம் தொடர்பில் நீதியான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படல் வேண்டும் என்றும் வலியுறுத்தும் முகமாக கிளிநொச்சி ஊடக அமையத்தினர் நேற்று கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்தியப் பிரதிப் பொலிஸ்மா அதிபரைச் சந்தித்து கலந்துரையாடியதுடன் மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

கிளிநொச்சி - முல்லைத்தீவு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் இச் சந்திப்பு நேற்று காலை ஒன்பது மணிக்கு இடம்பெற்றது.

கிளிநொச்சி ஊடக அமையம் கையளித்த மகஜரில்,

கடந்த 12.10.2020 அன்று முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவிலுள்ள குமுழமுனை கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் தங்களது ஊடகப் பணியில் ஈடுபட்டிருந்த முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த சண்முகம் தவசீலன், கணபதிப்பிள்ளை குமணன் ஆகிய இரண்டு ஊடகவியலாளர்கள், சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த குழு ஒன்றால் கடுமையாக தாக்கப்பட்டு, கொலை அச்சுறுத்தலுக்கும் உள்ளாக்கப்பட்டனர்.

இது ஊடக சுதந்திரத்திற்கும், ஊடகவியலாளர்களின் தடையின்றிய பணிக்கும் பெரும் சவாலாக அமைந்துள்ளது. எதிர்காலத்தில் ஊடகவியலாளர்கள் அச்சமின்றி தங்களது பணியை மேற்கொள்ள முடியாத நிலையை இச் சம்பவம் ஏற்படுத்தியுள்ளது. எனவே கிளிநொச்சி முல்லைத்தீவு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் என்ற வகையில் தாங்கள் இவ் விடயத்தில் அதிக கரிசனை எடுத்து குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு உரிய தண்டனை பெற வழிசமைப்பதோடு, ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோருகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-214)



# சனசமூக நிலையங்களுக்கு நிதி வழங்கிவைப்பு

கொடிகாமம், ஒக்.15

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கான அன்பளிப்பு நிதி வழங்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன் தலைமையில் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை செயலாளர் திருமதி எஸ்.தர்சினி, உபதவிசாளர் க.முத்துக்குமார் மற்றும் சனசமூக நிலைய நிர்வாகிகள் கலந்துகொண்டனர். நிகழ்வில் கிராமங்கள் தோறும் கொரோனா வைரஸைத் தடுப்பது தொடர்பான விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் சனசமூக நிலைய நிர்வாகிகளிடம் வழங்கப்பட்டன. (ந-159)


# வாழ்வாதார சுழற்சி கடன் திட்டம்

மன்னார், ஒக்.15

மன்னார் முசலி பிரதேச செயலக பிரிவில் மருதமடு கிராமத்தில் கிராம சக்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இவ் அமைப்பில் உள்ளவர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறுபட்ட வாழ்வாதாரத்துக்கான சுழற்சி முறையிலான கடன் வழங்கப்பட்டது.

முசலி பிரதேச செயலாளர் இக் கடனை இரண்டாம் கட்டமாக வழங்கிவைத்தார்.

இந் நிகழ்வில் உதவி திட்டமிடல் பணிப்பாளர் யூட் மைக்கல்ராஜ் அபிவிருத்தி திட்டப் பணிப்பாளர் எம்.ராவீவ், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள் மற்றும் இக் குழு அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ந-60)



# உள்ளூர் தொழில்துறைக்கு பாஸ்மதி இறக்குமதி கேடு!

*அனைத்து இலங்கை விவசாயிகள் கூட்டமைப்பு வலியுறுத்து*

கொழும்பு, ஒக்.15

**பாகிஸ்தானில் இருந்து பாஸ்மதி அரிசியை இறக்குமதி செய்யும் முடிவை இடைநிறுத்த வேண்டும் என்று அனைத்து இலங்கை விவசாயிகள் கூட்டமைப்பு அரசிடம் கோரியுள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பின் தலைவர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளதாவது:

பலவகையான அரிசிகளை இறக்குமதி செய்ய அரசு தயாராகி வருகின்றது என்று தகவல் கிடைத்துள்ளது. ஆரம்பகட்டமாக பாஸ்மதி அரிசியை இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

உள்ளூர் தொழில்துறையை வளப்படுத்த அரிசி இறக்குமதி செய்யக்கூடாது. தன்னிறைவு பெற்ற பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக சில பொருள்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது என்று அரசு கூறுகின்றது. பின்னர் அதற்கு முரணாக அரிசி இறக்குமதி செய்யப்படுகின்றது.

உள்ளூர் உற்பத்தியை வளப்படுத்தப் போகின்றோம் என்று கூறி மஞ்சள் போன்ற பொருள்களின் இறக்குமதியை அரசு தடை செய்துள்ளது. அதனால் மஞ்சள் உள்ளிட்ட பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தனது கொள்கைகளுக்கு மாறான அரசு அரிசி இறக்குமதியை மேற்கொள்கின்றது- என்றார். (எ-இ)

## சுகாதார நடைமுறைகள் தொழிலிடத்தில் கட்டாயம்

*சுகாதார அமைச்சு அறிவுறுத்து*



கொழும்பு, ஒக்.15

அனைத்துத் தொழிற்சாலை நிர்வாகங்களும் சுகாதாரத் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகள் மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று சுகாதார அமைச்சர் பவித்திராதேவி வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது

தொழிற்சாலை நிர்வாகங்கள் ஒரு நாளில் குறைந்தது மூன்று தரமாவது தொழிலாளர்களின் உடல் வெப்பநிலையைப் பரிசோதிக்க வேண்டும். அவர்களின் தங்குமிடம் மற்றும் நெருக்கமான தொடர்புகளை அறிந்திருத்தல் வேண்டும். போக்குவரத்து நெரிசலைக் குறைக்க தொழிற்சாலைகளின் வேலை நேரங்களில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். தொழிலாளர்களின் தற்போதைய முகவரிகளின் பதிவுகளைக் கொண்டிருந்தல் வேண்டும்.

கட்டுநாயக்க, பியகம சுதந்திர வர்த்தக வலயங்களில் உள்ள தொழிலாளர்களுக்கு இலவச பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொழிற்சாலை நிர்வாகங்கள் தொழிற்சாலைகளின் பகுதிகளைக் கண்டிப்பாகத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். வெளிநபர்கள் தொழிற்சாலைகளுக்குள் நுழைவதையும் தடை செய்ய வேண்டும் - என்றார். (எ-இ)

## பதின்ம வயதுச் சிறுமியை வன்புணர்ந்தவருக்கு சிறை

திருகோணமலை, ஒக்.15

பதின்ம வயதுச் சிறுமியைத் துஷ்பிரயோகம் செய்த ஒருவருக்கு திருகோணமலை மேல் நீதிமன்றம் 20 ஆண்டுகள் கடூழிய சிறைத் தண்டனை விதித்துள்ளது.

இது தொடர்பான வழக்கு திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தபோதே, இவ்வாறு தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கிண்ணியா, சூரங்கல் பகுதியில் 2012ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் நடந்துள்ளது. சிறுமி உறங்கிக் கொண்டிருந்தபோது, வீட்டின் கூரையைப் பிரித்து வீட்டுக்குள் இறங்கி சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

எதிரிக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. இந்த வழக்கின் கடந்த சில தவணைகளுக்கு எதிரி மன்றில் முன்னிலையாகவில்லை. எதிரி இன்றி விசாரணை நடத்தப்பட்டு நேற்று தீர்ப்பு பகிரங்கமாக திறந்த நீதிமன்றில் வழங்கப்பட்டது. எதிரி நேற்றும் நீதிமன்றுக்குச் சமூகமளிக்காமையால் அவருக்கு எதிராகத் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

குற்றவாளிக்கு 20 வருட கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 12 லட்சம் ரூபா நட்டஈடு வழங்க வேண்டும் என்றும், நட்ட ஈடு வழங்கப்படாவிட்டால் 15 வருட கால மேலதிக கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் நீதிமன்று கட்டளையிட்டது.

அரச செலவாக 3 குற்றச்சாட்டுக்கும் தலா 25 ஆயிரம் ரூபா வீதம் 75 ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும் என்றும், அதைச் செலுத்தத் தவறும் பட்சத்தில் 18 மாத கால கடூழிய சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும் என்றும் மேல் நீதிமன்று கட்டளையிட்டது. (எ-45)

## விபத்தால் மாணவனின் கால் அகற்றம்

கொழும்பு, ஒக்.15

கரந்தெனியவில் நேற்றுக் காலை நடந்த விபத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சார்த்தி ஒருவர் படுகாயமடைந்தார். அவர் எல்பிட்டிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்று கரந்தெனிய பொலிஸார் தெரிவித்தனர்.

பஸ்ஸுடன் மோதி இந்த விபத்து நடந்துள்ளது. விபத்தில் மாணவனின் இரு கால்களும் பலத்த பாதிப்புக்குள்ளான நிலையில் ஒரு காலை அகற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.

கரந்தெனிய மகா வித்தியாலயத்தில் கற்கும் மாணவனே விபத்துக்குள்ளாகியுள்ளார். விபத்துத் தொடர்பான விசாரணைகளை கரந்தெனிய பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)

## விளையாட்டு பயிற்சியிலும் சுகாதார பாதுகாப்பு தேவை

*விளையாட்டுத்துறை அமைச்சு அறிவுறுத்தல்*

கொழும்பு, ஒக்.15

விளையாட்டுப் பயிற்சிகள் முன்னெடுக்கப்படும் இடங்களில் கொரோனா ஒழிப்பு சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

பயிற்சி பெறும் வீரர்களின் பெயர்ப் பட்டியல் பராமரிக்கப்பட வேண்டும். அதில் வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் உதவி நிர்வாகிகள் அனைவரது பெயர்களும் உள்ளடக்கப்பட வேண்டும் என்று அமைச்சின் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## மஹிந்தவின் வெளிநாட்டு உறவு பணிப்பாளர் அநுராதா!

கொழும்பு, ஒக்.15

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் வெளிநாட்டு உறவுகள் பணிப்பாளர் நாயகமாக அநுராதா ஹேரத் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக பதவி வகித்த காலப் பகுதியில் ஜனாதிபதியின் டிஜிட்டல் ஊடகப் பணிப்பாளராகக் கடமையாற்றிய அநுராதா, 2013ஆம் ஆண்டு பொது நலவாய சபைக் கூட்டத்தில் ஊடகப் பேச்சாளராகவும் செயற்பட்டிருந்தார். (எ-இ)

## அ.புரம் சிறையிலிருந்து கம்பி நீட்டினார் கைதி!

கொழும்பு, ஒக்.15

அநுராதபுரம் சிறைச்சாலையில் இருந்து கைதி ஒருவர் தப்பிச் சென்றுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நடந்துள்ளது.

தம்புத்தேம, கல்வடுவாகம பகுதியைச் சேர்ந்த 27 வயதான கைதி ஒருவரே தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. இவர் சட்டவிரோதமாக மதுபான உற்பத்தி செய்தமைக்காக கைதுசெய்யப்பட்டவர் என்றும், தம்புத்தேகம நீதிமன்றின் உத்தரவின்படி சிறையில் அடைக்கப்பட்டவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறைச்சாலை வளாகத்தைத் துப்புரவாக்கும் செயற்பாடு நடந்துகொண்டிருந்த சந்தர்ப்பத்திலேயே கைதி அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

தப்பிச்சென்ற கைதியைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகளும், பொலிஸாரும் முன்னெடுத்து வருகின்றனர். (எ-இ)

## சிறைச்சாலை அதிகாரிகளுக்கு பி.சி.ஆர்.

கொழும்பு, ஒக்.15

கொழும்பில் உள்ள அனைத்துச் சிறைச்சாலைகளிலும் பணியாற்றும் அதிகாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைத் தலைமையகம், மகசீன் சிறைச்சாலை, வெலிக்கடை சிறைச்சாலை என்பவற்றில் பணியாற்றும் அதிகாரிகளுக்கு நேற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ



மயிலிட்டி திருப்பூர் இளைஞர் நற்பணி ஒன்றியத்தின் பொருளாளரும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஆசிரியருமான சகாதேவன் வசந்தராஜ் தன்னுடைய 29 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு 29 தென்னை மரக்கன்றுகளை நட்டுள்ளார்.
கடல் அரிப்பைத் தடுத்தல், கடற்கரையை அழகுபடுத்தல், மற்றும் பசுமை பேணல் போன்ற நோக்கங்களுக்கான முன்மாதிரியாக அவர் செயற்பட்டுள்ளார். நிகழ்வில் கிராம அலுவலகர் மற்றும் கிராம மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ப-159)

# 141 சிறிய குளங்கள் வவுனியாவில் சீரமைப்பு

வவுனியா, ஒக்.15
வவுனியா மாவட்டத்தில் இவ்வாண்டு 141 சிறிய குளங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.
வவுனியாவில் விவசாய நடவடிக்கைளை மேலும் விருத்திசெய்து உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் வவுனியா மாவட்டத்தில் உள்ள குளங்களைச் சீரமைத்து அதனை விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.
அதனடிப்படையில், வவுனியா மாவட்டத்தில் இவ்வாண்டு 29.4 மில்லியன் ரூபா செலவில் 141 சிறிய குளங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், 105 சிறிய குளங்களின் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதற்கு 34 மில்லியன் ரூபா தேவைப்படுகின்றது-என்றார். (ப-18)

# சந்தைக் கட்டடத் தொகுதி உருத்திரபுரத்தில் திறப்பு



கரைச்சி பிரதேச சபையின் , 2.42 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் கிளிநொச்சி உருத்திரபுரத்தில் அமைக்கப்பட்ட சந்தைக் கட்டடத்தொகுதி நேற்று திறந்துவைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அதைத் திறந்துவைத்தார்.
கரைச்சிப் பிரதேச சபையின் உறுப்பினர் கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், சபையின் உறுப்பினர்கள், கிராம பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், வர்த்தக சங்கத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-222,-113)

# வீட்டுத்திட்டங்கள் முழுமைபெற காணிப் பத்திரங்களை வழங்குங்கள்

## வடக்கு ஆளுநர் பணிப்பு

கிளிநொச்சி, ஒக்.15
கரைச்சிப் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு உரிய காலத்தில் வீட்டுத்திட்டம் முழுமைபெற முறையான காணிப்பத்திரம் வழங்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எல். சார்ள்ஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;
கரைச்சிப் பிரதேச செயலகம் மக்களுக்கு வீட்டுத்திட்டம் வழங்குவதற்கு முன்னர் அவர்களுக்கு உரித்தான காணிகளை முறைப்படி உரிய காலத்தில் வழங்கியிருத்தல் வேண்டும். அதன் பின்னரே அப் பிரதேச மக்களுக்கு வீட்டுத் திட்டதை வழங்கியிருக்க வேண்டும். தற்போது காணிகளின் உரித்து முறையாக வழங்கப்படாத சூழலில் வீட்டுத்திட்டத்தை எவ்வாறு உள்ளூராட்சி சபையூடாக சம்பந்தப்பட்ட மக்கள் முன்னெடுப்பது? எனவே கரைச்சிப் பிரதேச செயலகத்தால், வீட்டுத்திட்டங்கள் வழங்கியவர்களுக்கான காணி உரிமையை உடன் முறைப்படுத்தி முழுமையாக வழங்க முன்வரவேண்டும். அதன் பின்னர் வீட்டுத்திட்ட பெயர்ப்பதிவினை உள்ளூராட்சி சபையூடாக உடன் முன்னெடுத்து வீட்டுத்திட்டத்தை ஆரம்பிக்கலாம். மேற்படி விடயத்தில் வீட்டுத்திட்டம் கிடைத்த சாதாரண பொதுமக்களை அலைக்களிக்காது கரைச்சிப் பிரதேச செயலகம், பிரதேச சபை என்பவை ஒருங்கிணைந்த வகையில் மக்களுக்கு உரிய காலத்தில் வீடு கிடைக்க பணியாற்ற வேண்டும் -என்றார். (ப-50)

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த சாராயப் போத்தல்கள் மீட்பு

## ஒருவர் கைது



பண்டத்தரிப்பு, ஒக்.15
பண்டத்தரிப்புப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 50 அரச சீல் சாராயப் போத்தல்கள் நேற்று முன்தினம் இரவு கைப்பற்றப்பட்டன. சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.
பண்டத்தரிப்பு நகரப் பகுதியிலுள்ள வீடொன்றில் சட்டவிரோதமான முறையில் அரச சீல் சாராயப் போத்தல்கள் பதுக்கி வைத்து, அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என்று கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து, மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், 180 மில்லி லீற்றர் அளவுடைய, 50 சாராயப் போத்தல்கள் மீட்கப்பட்டன. வீட்டின் உரிமையாளரான 48 வயதுடைய ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ப-20)

# உடைந்து விழும் நிலையில் மின்சாரத் தூண்கள்



வவுனியா குழுமாட்டுச்சந்தி மரக்காரம்பளை வீதியை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையால், வீதியோரத்தில் காணப்படும், பழமையான மின்சாரத் தூண்கள் உடைந்து விழும் நிலமையில் உள்ளன.
வீதி அபிவிருத்தி அதிகார சபையால், ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடன், அரச கட்டுமான பொறியியல் நிறுவனத்தினால் 3.40 கிலோ மீற்றர் நீளமான குழுமாட்டுச்சந்தி மரக்காரம்பளை வீதி செப்பனிடப்படும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
அந்த வீதியின் அபிவிருத்திப் பணியின்போது பயன்படுத்தப்படும் மண், கற்களை அமர்த்தும் இயந்திரத்தின் செயற்பாட்டின் காரணமாக வீதியோர பழமையான மின்சாரத் தூண்கள் உடைந்து விழும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அவ் வீதியூடாகப் பயணிக்கும் மக்கள் பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இது குறித்து "இதுவரையில் எமக்கு எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கப்பெறவில்லை. விரைவில் இது தொடர்பில் ஆராய்ந்து தீர்வு வழங்குவோம்" என்று வவுனியா மாவட்ட பிரதான மின் பொறியிலாளர் திருமதி மைதிலி தயாபரன் தெரிவித்தார். (ப-18)

# ரியூட்டரிகளை திறந்தால் நடவடிக்கை

வவுனியாவில் தனியார் கல்வி நிலையங்களை உத்தரவை மீறித் திறந்தால் பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்டச் செயலர் சமன் பந்துலசேன தெரிவித்துள்ளார். கொவிட்-19 அச்சுறுத்தல் காரணமாக வவுனியா மாவட்டத்தில் தனியார் கல்வி நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. அரச உத்தரவை மீறி தனியார் கல்வி நிலையங்கள் திறக்கப்பட்டால் பொலிஸார் ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும். கொவிட்-19 இன் தாக்கத்தை கட்டுப்படுத்த அனைவரது ஒத்துழைப்பும் அவசியம் -என்றார். (ப-18)



## ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுக்கு நீதி வேண்டும்

*யாழ். ஊடக மன்றம் ஜனாதிபதிக்கு கடிதம்*

யாழ்ப்பாணம், ஒக்.15
சட்டவிரோத மரக் கடத்தல்காரர்களால், தாக்கப்பட்ட ஊடகவியலாளர்கள் இருவர் தொடர்பில், பக்கச்சார்பற்று நீதி வழங்கப்பட வேண்டும் என்று யாழ் ஊடக மன்றத்தால், ஜனாதிபதிக்கு கண்டன மனு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் ஊடாக நேற்றுக் காலை அந்த மனு அனுப்பப்பட்டது.

ஊடகத்துறையைச் சார்ந்து செயற்படுகின்ற ஊடகவியலாளர்கள் இவ்வாறான தாக்குதல் சம்பவத்துக்கு உட்படுகின்றபோது அவர்களுக்கு சரியான முறையில் நீதி வழங்கப்பட வேண்டும். இதனை ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டு வந்து, ஊடக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட வேண்டுமென அந்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் தமது கண்டனத்தைத் தெரிவித்த யாழ்ப்பாண மாவட்டச் செயலர், ஊடக மன்றத்தால், கையளிக்கப்பட்ட மனுவை ஜனாதிபதிக்கு அனுப்பி, அது தொடர்பில் துரித நடவடிக்கை எடுப்பதற்கு தான் முயற்சிகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார். (ஐ-111)

# காலநிலை மாற்றத்தால் மீன்பிடித் தொழில் பாதிப்பு

## மன்னார் மீனவர்கள் கவலை

**மன்னார், ஒக் 15**
**காலநிலை மாற்றம் ஏற்பட்டு கடற்பகுதிகளில் காற்று அதிகரித்துள்ளதால் மீனவர்கள் எவரும் கடலுக்குள் செல்வதில்லை, இதனால் மன்னாரில் அன்றாடம் மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் நூற்றுக் கணக்கான மீனவக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் மீனவர்கள் மேலும் தெரிவித்ததாவது;
இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறிய வருகைகளால், எமது மன்னார் கடற்பகுதியில் மீன் வளங்கள் குறைந்துள்ளன. அத்துடன் தடைசெய்யப்பட்ட வலைகளைப் பாவித்து சிலர் மீன்பிடியில் ஈடுபடுகிறார்கள். சாதாரண மீனவர்களுக்கு படகுகளின் எரிபொருள் செலவுகளுக்குக் கூட மீன்கள் பிடிபடுவதில்லை.

அதற்குள் கொரோனாப் பிரச்சினை, இந்திய இழுவைப்படகுகளால் பிரச்சினை, காலநிலைப் பிரச்சினை என்று மீனவர்களின் வாழ்வாதாரம் தான் பாதிக்கப்படுகிறது. காலநிலைப் பிரச்சினைகளைக் காரணம் காட்டி தொழிலுக்கு தடைவிதிக்கும் மீன்பிடி தொடர்பான அதிகாரிகள் இந்த நாள்களில் எமக்கு இடர்காலக் கொடுப்பனவுகளை வழங்க வேண்டும் என்றனர். (ஐ-213)

## சுகாதார முறையுடன் கழிவகற்றல்

கொழும்பு,ஒக்.15
தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டோரின் வீடுகளிலுள்ள கழிவுகளும் சுகாதார முறைகளுடன் அகற்றப்படவுள்ளன. வீடுகளில் தனிமைப்படுத்தலிலுள்ள நபர்கள் பயன்படுத்தும் முகக் கவசங்கள், கையுறைகள் ஆகியவை பிரத்தியேகமாக அகற்றப்பட வேண்டும் என மேல் மாகாண கழிவு முகாமைத்துவ அதிகார சபை தெரிவித்துள்ளது. அத்துடன், உணவுக் கழிவுகளை இயலுமானவரை வீட்டுத் தோட்டங்களில் புதைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகார சபையின் பணிப்பாளர் நலீன் மான்னப்பெரும தெரிவித்தார். (ஐ-இ)




## சைக்கிள்கள் கையளிப்பு

வவுனியா,ஒக்.15
வவுனியா ஓமந்தை பாலமோட்டை மற்றும் நவ்வி பகுதிகளைச் சேர்ந்த வசதியற்ற பாடசாலை மாணவர்கள் இருவருக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

புலம்பெயர் மக்களின் நிதி உதவியில் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தால் வவுனியா மாவட்ட செயலகத்தில் வைத்து நேற்று வழங்கப்பட்டன.

நிகழ்வில் வவுனியா மாவட்ட மேலதிக செயலர் செல்வி கு.சபர்ஜா, மாவட்ட சிறுவர் மேம்பாட்டு அலுவலகர் ஜெ.ஜெயகெனடி, சமூக பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் நிறுவுநர் து.சுதாகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-110)

## இரு வாரங்களுக்கு ஒருமுறை பி.சி.ஆர். பரிசோதனை

கொழும்பு, ஒக்.15
இரண்டு வாரத்துக்கு ஒருமுறை ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை பி.சி.ஆர் பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கொவிட்-19 தொற்று பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையம் ஆடைத் தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

இதேபோன்று அனைத்து ஊழியர்களினதும் நிரந்தர முகவரியை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ-இ)

## கைகலப்பில் ஒருவர் காயம்

முல்லைத்தீவு,ஒக்.15
உறவினர்களுக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பில் முடிந்தது. அதில் ஒருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் முல்லைத்தீவு பணங்காமம் கிராமத்தில் நேற்று முன்தினம் நடந்துள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த 34 வயதுடைய குடும்பஸ்தர் கைமுறிந்த நிலையில், கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பாதிக்கப்பட்டவரின் முறைப்பாட்டை அடுத்து, பாண்டியன்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சு-ரி1)

## சாவகச்சேரியில் 553 இடங்களில் நேற்று டெங்குப் பரிசோதனைகள்

சாவகச்சேரி,ஒக்.15
சாவகச்சேரி நகர் பொது சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட 553 இடங்களில் நேற்று டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு வார பரிசோதனைகள் அனைத்து சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைகளாலும் நேற்று மேற்கொள்ளப்பட்டன.

சுகாதார திணைக்களத்தினருடன் பொலிஸார், பிரதேச செயலகத்தினர்,உள்ளூராட்சி சபையினர், டெங்கு பரிசோதனை உதவியாளர்கள்,கிராம மட்ட சுகாதாரக் குழுக்கள் போன்றோர் பரிசோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.




சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர், சாவகச்சேரி நகர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட சங்கத்தானை கிராம அலுவலர் பிரிவில் பத்துக் குழுக்களாக பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

இப் பகுதியில் உள்ள குடியிருப்புகள் ஆலயங்கள் கட்டட நிர்மாணத்தளங்கள், பாடசாலைகள் தனியார் கல்வி நிறுவனங்கள் போன்ற 553 இடங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவற்றில் 398 இடங்களில் டெங்கு நுளம்பு உருவாகக் கூடிய பொருள்கள் காணப்பட்டன. இவற்றில் 356 இடங்களில் காணப்பட்ட பொருள்கள் உடனடியாகத் துப்புரவு செய்யப்பட்டன.

டெங்கு நுளம்பு உற்பத்தியாக்கக்கூடிய குடம்பிகள் காணப்பட்ட 38 குடியிருப்பாளர்களுக்கு மூன்று தினங்களில் துப்புரவு செய்ய கால அவகாசத்துடன் சிவப்பு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)

## சா/த மாணவர்களுக்கு சுய கற்றல் இறுவட்டுக்கள்


யாழ்ப்பாணம், ஒக்.15
நடப்பாண்டில், (ஜனவரி 2021) க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு பரீட்சையை மையப்படுத்திய மீட்டல் வினாக்கள் மற்றும் அவற்றுக்கான விடையளிக்கும் முறை தொடர்பான ஒலிப்பதிவைக் கொண்ட இலத்திரனியல் கற்றல் இறுவட்டுக்கள் என்பன வடமாகாண கல்வித் திணைக்களத்தின் எல்.எம்.டி. எம் அலகினால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ், ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம், வரலாறு ஆகிய பாடங்களுக்கு இந்தக் கற்றல் இறுவட்டுக்கள் தயாரிக்கப்படுகின்றன.

இம் முன்னோடி செயற்றிட்டத்தின் முதலாவது தொகுதி இறுவட்டுக்கள் தீவகம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு ஆகிய பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென அந்தந்த வலயங்களின் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் ஏனைய வலயப் பாடசாலைகள் தமக்குத் தேவைப்படும் இறுவட்டை பாடசாலை அதிபரின் கோரிக்கைக் கடிதத்தை உரிய சுகாதார நியமங்களைப் பின்பற்றி, நல்லூர் ஆனந்தா வித்தியாலயத்தில் இயங்கும் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் எல்.எம்.டி.எம் அலகில் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
26 . 02 . 1947

மறைவு
27 . 09 . 2019

## அமரர் கந்தையா அருமைத்துரை

(முன்னாள் ஓய்வு பெற்ற முகாமையாளர் சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்)

திதி : சதுர்த்தசி

எங்கள் சிந்தையெல்லாம்
தெய்வமாகி வாழும் தெய்வமே
ஒவ்வொரு நொடிப்பொழுதும்
தேடுகின்றோம் வையத்தில் வாழும் வரை
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

இணுவில் தெற்கு,
இணுவில்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், சகோதரர்கள்,
பேரப்பிள்ளைகள்

# விண்ணவரோடு மகிழ்ந்து முதலாம் ஆண்டு



**எ.அன்ரனி ஜெயரட்ணம்**
தோற்றம் 04. 12. 1946
மறைவு 15.10.2019

**அன்ரனி அகிலாண்டதேவி**
தோற்றம் 31.12.1951
மறைவு 01.10.2019

" இன்றே நீ என்னோடு வான் வீட்டில்
இருப்பாயென்று உறுதியாக நான் உனக்கு
சொல்லுகிறேன் "

லூக்கா 23 : 43

இமைகள் மூடித் திறப்பதற்குள்
வருடம் ஒன்றாகி விட்டது
நாம் வாழும் நாள்களில் உங்கள் நினைவுகள்
எம்முடன் என்றென்றும் வாழும்.......

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றுக்காக நாளை (16.10.2020) வெள்ளிக் கிழமை மாலை 5.00 மணியளவில் ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். 19.10.2020 திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தி லும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஏழாலை கிழக்கு.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சிதம்பரப்பிள்ளை தங்கமுத்து (றேஸ் அம்மா)



காரைநகர் முல்லைப்பிளவைப் பிறப்பிடமாகவும் தங்கோடையை வசிப்பிடமாக வும் தற்போது சுன்னாகம் ஐயனார் கோயில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை தங்கமுத்து நேற்றுமுன்தினம் (13.10.2020) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை (வர்த்தகர் பசறை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான முல்லைப்பிளவைச் சேர்ந்த நாகமுத்து - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ் சென்றவர் களான அம்பலவாணர், சிவபாக்கியம், திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரி மற்றும் விக்கினேஸ்வரன் (கனடா), சுந்தரேஸ்வரன் (ஜெயகிருஷ்ணா ஹாட்வெயர் - சுன்னாகம்), சிவனேஸ்வரன் (சுவிஸ்), யோகேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், சிவானந்தராசா (மின்சார சபை - சுன்னகாம்), விஜயராணி (கனடா), கீதாஜினி, அருட்செல்வி (சுவிஸ்), சிவமலர் (சுவிஸ்) ஆகியோரின் மாமியும், துசி - சிவானந்தன் (கனடா), காலஞ்சென்ற துவாகரன் மற்றும் துஸ்யந்தி - கஜன் (கனடா), தர்ஷன் (கனடா), கஜன் (கனடா), அருண் (கனடா), நீதீசன் (சுவிஸ்), பாணுஜா (உடுவில் - மகளிர் கல்லூரி A/L 2021), சுகேசன் (சென்ஜோன்ஸ் கல்லூரி - தரம்: 10), சிவாணி (சுவிஸ்), சிவானுஜன் (சுவிஸ்), கோபிதன் (சுவிஸ்), கோபிகா (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும், கஜானன் (கனடா), சரண் (கனடா), கவிஸ் (கனடா) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.10.2020) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் சுன்னாகம் ஐயனார் கோயில் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம் பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம்
29.08.1932

மறைவு
13.10.2020

இல.5, ஐயனார் கோயில் வீதி,
சுன்னாகம்.
077 772 2589, 021 224 0687

தகவல் :
சி.சுந்தரேஸ்வரன் (மகன்)
(ஜெயகிருஷ்ணா ஹாட்வெயர் - சுன்னாகம்)

## கொள்வனவு

நெல், தானியவகை கொள்வனவு செய்யப்படும்.

**077 772 2215**

## பணியாளர் தேவை

கிளிநொச்சியில் உள்ள நிறுவனமொன்றிற்கு

1. **கணக்காளர்** (கணினி கையாள்வதில் போதிய அனுவம்)
2. **சமையலாளர்**

**077 772 2305**

## விநியோகஸ்தர் தேவை

எமது உற்பத்திகளான அரிசிமா வகை விநியோகஸ்தர்கள் தேவை.

**077 772 2215**

## வேலையாள் தேவை

**மேசன், கூலி** வேலையாள்கள் தேவை.

**076 660 1600**


**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை**

## பளை பேருந்து தரிப்பிடத்திற்கு மேலுள்ள கடை, இயக்கச்சி வளாக கடைகள் நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2020

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 15.10.2020 தொடக்கம் 29.10.2020 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 29.10.2020 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 29.10.2020 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

### பளை பேருந்து தரிப்பிடத்திற்கு மேலுள்ள கடைகள்

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | BUS-6 | 285,000.00 | 28,500.00 | 2,000.00 |

இயக்கச்சி சந்தை வளாக கடைகள் 2021 ம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்


| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வீ வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | VS-03 | 75000.00 | 7500.00 | 2000.00 |
| 02 | VS-04 | 75000.00 | 7500.00 | 2000.00 |
| 03 | PS-04 | 150000.00 | 15000.00 | 2000.00 |
| 04 | PS-06 | 120000.00 | 12000.00 | 2000.00 |
| 05 | PS-07 | 120000.00 | 12000.00 | 2000.00 |
| 06 | PS-08 | 105000.00 | 10500.00 | 2000.00 |
| 07 | PS-09 | 105000.00 | 10500.00 | 2000.00 |
| 08 | PS-10 | 105000.00 | 10500.00 | 2000.00 |
| 09 | PS-11 | 96000.00 | 9600.00 | 2000.00 |
| 10 | PS-12 | 96000.00 | 9600.00 | 2000.00 |
| 11 | PS-13 | 96000.00 | 9600.00 | 2000.00 |
| 12 | PS-14 | 96000.00 | 9600.00 | 2000.00 |

**நிபந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர். பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பபடல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவகைம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 29.10.2020 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும் குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும் தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
06. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ளவேண்டும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
09. Vs-03 ,VS-04 ஆகிய கடைகள் மரக்கறி வியாபாரத்திற்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளது.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**சுப்பிரமணியம் சுரேன்.**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை.** 15.10.2020

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **பஞ்சவர்ணம்பிள்ளை**
**கிருஷ்ணமூர்த்தி**
(தேவி அச்சகம் ஸ்தாபகர்,
மூர்த்தி விளம்பர சேவை)

**மலர்வு** 15.03.1936 — **உதிர்வு** 26.09.2011

திதி: சதுர்த்தசி (15.10.2020)

அன்பு அப்பா பாசத்தின் நிறைகுடமாய்
பரிவுடன் எமை வளர்த்து கல்வியூட்டி
வாழ்வின் பாதைக்கு வழிகாட்டிய
அன்புத் தெய்வமே! ஆண்டுகள் ஒன்பது
ஆனாலும் ஆறாது எமது சோகம்
இதயங்களில் சுமையோடு
காத்திருக்கிறோம் அப்பா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய மாரியம்மனை வேண்டி நிற்கும்.

**குடும்பத்தினர்.**
**114/19, நாவலர் றோட்,**
**யாழ்ப்பாணம்.**

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை – பளை**

## இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்-2021

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 15.10.2020 தொடக்கம் 29.10.2020 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 29.10.2020 பிற்பகல் 2.00 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 29.10.2020 பிற்பகல் 2.00 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

இறைச்சிக்கடைகளுக்கான கேள்வி அட்டவணை.

| இல | கடை இல | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| புலோப்பளை உப அலுவலகம் | | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 1,755,600.00 | 34,000.00 | 2,000.00 |
| 02 | கோழியிறைச்சிக்கடை | 733,260.00 | 14,600.00 | 2,000.00 |
| 03 | ஆட்டிறைச்சிக்கடை | 61,600.00 | 5,000.00 | 2,000.00 |
| 04 | கருவாட்டுக்கடை | 12,000.00 | 5,000.00 | 2,000.00 |
| முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | | |
| 04 | கோழியிறைச்சிக்கடை | 67,650.00 | 5,000.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்:-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப் படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 29.10.2020 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.
05. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகை 300,000.00 ரூபாவிற்கு உட்பட்ட தொகையாயின் கேள்வித்தொகையின் 1/2 பகுதியையும், 300,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட தொகையாயின் 1/3 பகுதியையும் செலுத்தி சபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும். மிகுதி தொகையினை 08 பகுதியாக பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்தமாதம் 10 ம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப்பணமாக அறவிடப்படும்.
06. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகையினை கேள்வித்தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க . நடந்து கொள்ளல் வேண்டும்.
08. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
09. மாட்டிறைச்சிக்கடைகளை பெறுவோர் சபையினால் அமைக்கப்பட்ட கொல்களத்திலேயே மாடு அறுத்தல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளர்/செயலாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சுப்பிரமணியம் சுரேன். 15.10.2020
தவிசாளர்
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை-பளை.

## மாணவர்களுக்கு....

புதிய துணைவேந்தராகப் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா பதவியேற்ற பின்னர், பல்கலைக்கழகத்தில் இம்சை வதையில் ஈடுபடுபவர்களுக்கெதிரான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்காக விரைவு பொறிமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலையில், குற்றம் இடம்பெற்று ஒருமாத காலத்தினுள் தண்டனை அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரைப் பிரகாரம், யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறையைச் சேர்ந்த மூன்றாம் வருட மாணவர்கள் 4 பேருக்குக்கு ஒரு கல்வி ஆண்டு காலம் கல்வி கற்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருப்பதுடன், பல்கலைக்கழக அல்லது துறைசார் மாணவர் ஒன்றியப் பதவி நிலைகளை வகிக்க முடியாத வகையிலான தடையுத்தரவு மற்றும் கல்வி கற்கும் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதிகளில் தங்கியிருந்து கற்பதற்கான வசதிகளும் மறுக்கப்படல் வேண்டும் என்று பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவுக்குப் பரிந்துரை செய்துள்ளது. அத்துடன் குற்றத்தின் பாரதூரத்தன்மை கருதி மாணவி ஒருவருக்குக் கடும் எச்சரிக்கையுடனான விலக்களிப்புக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் இரண்டாவது கூட்டம் நேற்றுப் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது, கடந்த மாதம் 3ஆம் திகதி சித்த மருத்துவத்துறையில் இடம்பெற்ற இம்சை வதை தொடர்பிலான இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

சித்த மருத்துவத் துறையில் இடம்பெற்ற இம்சை வதை தொடர்பில் ஆரம்பகட்ட பூர்வாங்க விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு, அதனடிப்படையிலான குற்றப்பத்திரிகை மீதான முறைசார் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, விசாரணை அறிக்கை நேற்று மாலை மாணவர் ஒழுக்காற்றுச் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையின் பரிந்துரைக்கமைய தண்டனைக்குரியவர்களுக்கான அறிவித்தல்கள் இன்று துணைவேந்தரால் அனுப்பி வைக்கப்பட இருக்கிறது.

பல்கலைக்கழக மாணவர் ஒழுக்காற்றுச் சபையில், பல்கலைக்கழகத்தின் சகல பீடாதிபதிகளான பத்துப் பேரும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட இரண்டு பேரவை உறுப்பினர்களும், மாணவ ஆலோசகர் ஒருவரும், பிரதிச் சட்ட நிறைவேற்று அதிகாரி (புறொக்டர்) ஒருவரும், போதனைசார் விடுதிக் காப்பாளர்கள் இருவருமாக இருபது பேர் அங்கம் வகிப்பதுடன், பதிவாளரின் நியமனப் பிரதிநிதியாக மாணவர் நலச் சேவைகளுக்கான உதவிப் பதிவாளர் செயலாளராகவும் செயற்படுகின்றனர்.

நேற்றைய கூட்டத்தில், சித்த மருத்துவத் துறை மாணவர்களுக்கான தண்டனைகள் பரிந்துரைக்கப்பட்டதுடன், இனிவரும் காலத்தில் இதே பொறி முறையில் இம்சை வதையில் ஈடுபட்டு, குற்றம் நிரூபிக்கப்படுமிடத்து கற்றல் நடவடிக்கைகளுக்கான தடை, சிறப்புத் துறைகளுக்கான தடை, முதலாம், இரண்டாம் வகுப்புச் சித்திகளுக்கான தகைமையிழப்பு, மகாபொல மற்றும் நிதியுதவிகளைத் தடை செய்தல், பல்கலைக்கழக அல்லது துறைசார் மாணவர் ஒன்றியப் பதவி நிலைகளை வகிக்க முடியாத வகையிலான தடையுத்தரவு மற்றும் கல்வி கற்கும் காலத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விடுதிகளில் தங்கியிருந்து கற்பதற்கான வசதிகளும் மறுக்கப்படல் உட்பட கடுமையான தண்டனைகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், குற்றத்தின் தன்மையைப் பொறுத்து பல்கலைக்கழக மாணவர் பதிவு இரத்துச் செய்யப்பட வேண்டும் எனவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தண்டனை வழங்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் தமிழ் மாணவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## புதிய அரசமைப்புக்காக...

பீடங்களும், கத்தோலிக்க ஆயர் பேரவையும் நாட்டில் புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதற்கும் பாடுபட வேண்டும்" இவ்வாறு வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன்.

அரசமைப்பின் 20ஆவது திருத்த முயற்சிகளைத் தோற்கடிக்குமாறு பௌத்தத்தின் நான்கு பிரதான மத பீடங்களில் இரண்டான அமரபுர பீடமும், ராமன்ய பீடமும் கூட்டறிக்கை ஊடாக அரசியல் தலைவர்களையும் பொதுமக்களையும் கோரியிருக்கின்றன. அதேவேளை, 20ஆவது திருத்தச் சட்ட வரைவைக் கைவிடுமாறு கத்தோலிக்க ஆயர் பேரவை அறிக்கையூடாக அரசிடம் வலியுறுத்தியுள்ளது. இது தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனிடம் நேற்றிரவு 'உதயன்' வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு எதிராக உயர்நீதிமன்றத்தை நாம் நாடியிருந்தோம். அந்தத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் மட்டும் நிறைவேற்ற முடியாது எனவும், சர்வஜன வாக்கெடுப்புமூலம் மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும் எனவும் மனுத்தாக்கலும் செய்திருந்தோம். அதற்கமைய உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பும் வெளிவந்துள்ளது. நான்கு முக்கிய சரத்துக்கள் தொடர்பில் எமக்குச் சாதகமான தீர்ப்பைப் பெற்றுள்ளோம். எனவே, ராஜபக்ச அரசு தயாரித்துள்ள 20ஆவது திருத்தச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட முடியாது. இது மக்களின் இறையாண்மையைப் பாதிக்கின்ற சட்ட வரைவு என்பதால் அவர்களின் ஆணையைப் பெற சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

இந்தநிலையில், 20ஆவது திருத்தம் தொடர்பில் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. 20ஆவது திருத்தத்துக்கு எதிரான எந்தக் கருத்துக்களையும் நாம் வரவேற்கின்றோம்.

குறித்த திருத்தச்சட்ட வரைவு தோற்கடிக்கப்பட வேண்டும் என்று கோரி பௌத்த மத பீடங்களும், அந்தத் திருத்தச் சட்ட வரைவை அரசு கைவிட வேண்டும் என்று வலியுறுத்தி கத்தோலிக்க ஆயர் பேரவையும் அறிக்கைகள் வெளியிட்டுள்ளன. இதை நாம் வரவேற்கின்றோம்.

நாட்டில் ஜனநாயகம் பாதுகாக்கப்படுவதற்கும் சர்வாதிகாரம் தொடர்ச்சியாக அமுல்படுத்தப்படாமல் இருப்பதற்கும் மக்களின் இறையாண்மையின் அடிப்படையில் மக்களின் கருமங்கள் தீர்க்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் உயர்நீதிமன்றத்தில் நாங்கள் ஒரு தீர்ப்பைப் பெற்றிருக்கின்றோம்.

இந்தநிலையில், பௌத்த பீடங்களினதும், கத்தோலிக்க ஆயர் பேரவையினதும் 20ஆவது திருத்தத்துக்கு எதிரான எதிர்ப்புக் குரலை வரவேற்கின்றோம். அதேவேளை, பௌத்த பீடங்களும், கத்தோலிக்க ஆயர் பேரவையும் நாட்டில் புதிய அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதற்கும் பாடுபட வேண்டும்.

அந்தப் புதிய அரசமைப்பு நாட்டிலுள்ள சகல இன மக்களும் சகல உரிமைகளுடன் - அடிப்படை உரிமைகளுடன்- ஜனநாயக உரிமைகளுடன்- மனித உரிமைகளுடன் - அரசியல் உரிமைகளுடன் வாழ்வதற்கு வழியமைக்கப்பட்ட வேண்டும். அந்தக் கருமத்தில் பௌத்த பீடங்களும், கத்தோலிக்க ஆயர் பேரவையும் தங்களது கவனத்தைச் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம். நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில் அந்தக் கடமையிலிருந்து எந்தத் தரப்பும் விலக முடியாது' என்றார். (ம-22)

## சமுர்த்தி...

கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது. அந்த வீட்டில் எவரும் இல்லாதவேளை வீட்டுக் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள், 5 பவுண் தங்க நகைகளையும் 20 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர். இது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர். (து-20)

## விலை அதிகரிப்பா?...

மாவட்டச் செயலகத்தின் 021 222 5000 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு முறைப்பாடு செய்ய முடியும்.

முறைப்பாட்டாளர்களின் விவரங்கள் தொடர்பான இரகசியம் காக்கப்படும்" இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"யாழ்ப்பாணத்தில் எந்தப் பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படவில்லை. மக்களின் நன்மை கருதி அரசு சில பொருள்களின் விலைகளைக் குறைத்துள்ளது. அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையை விட அதிக விலையில் பொருள்கள் விற்கப்பட்டால் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்.

இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் 501 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 98 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்கள். கட்டாயத் தனிமைப்படுத்தலில் இருந்தவர்களின் எண்ணிக்கை 28 இலிருந்து 18ஆகக் குறைந்துள்ளது" என்றார். (ம-ஒ,111)

## மாவட்டச் செயலர்...

ருத்தி மற்றும் காணி அமைச்சின் செயலாளராக கடமையாற்றியவருமான க.கருணாகரன் நியமிக்கப்பட்டுள்ளார். திருமதி கலாமதி பத்மராஜா, பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சுக்கு உடனடியாக நடைமுறையாகும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப் பகுதியான மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை காணிகளை அம்பாறை பொலன்னறுவை மாவட்டத்தில் உள்ள சிலர் கிழக்கு மாகாண ஆளுநரின் உதவியுடன் அபகரித்தமை தொடர்பாக நடவடிக்கை எடுத்ததன் பின்னணியிலேயே அவர் அரசியல் பழிவாங்கலுக்கு ஆளாகியுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. (ம-இ)

## கொரோனா....

லணியின் விசேட கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"100 படுக்கைகளைக் கொண்டதாக சிறப்பு மருத்துவமனையை வடக்கில் தயார்ப்படுத்த முடியும். நாட்டில் கொவிட்-19 நோயாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 700 பேரை அண்மித்துள்ள நிலையில் அரச மருத்துவமனைகளுக்கு மேலாக இந்தச் சிறப்பு மருத்துவமனையை வடக்கு மாகாணத்தில் அமைக்க இராணுவம் தயாராகவுள்ளது"- என்றார். (ம-ஒ.இ)

## மகனை....

செங்கலடியைச்சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயாரான சித்திரவேல் அன்னம்மா என்பவரே உயிரிழந்தவராவார். 1994ஆம் ஆண்டு காணாமல் ஆக்கப்பட்ட தனது மகனை 26 வருடங்களாக அவர் தேடி வந்துள்ளார். இலங்கை அரச படைகளாலும், துணை இராணுவக் குழுக்களாலும் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச நீதி வேண்டி கடந்த 2012ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட பல போராட்டங்களில் அவர் தன்னை ஈடுபடுத்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ம-19)

## மேலும் 132...

கொழும்பு, ஒக். 15

மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலை 'கொரோனா' கொத்தணிப் பரவலுடன் தொடர்புடைய மேலும் 132 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொடை ஆடைத்தொழிற்சாலை 'கொரோனா' கொத்தணியில் சிக்கி தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டவர்களும், ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுடன் தொடர்புகளைப் பேணியோருமே நேற்று புதிய தொற்றளர்களாக அடையாளம் கணப்பட்டுள்ளனர்.

இதனால் மினுவாங்கொட கொரோனாக் கொத்தணிப் பரவலில் சிக்கிய மொத்தத் தொற்றாளர்களின் எண்ணிக்கையானது ஆயிரத்து 723ஆக உயர்வடைந்துள்ளது. இதேவேளை, இலங்கையில் கொரோனா வைரஸின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 ஆயிரத்து 170 ஆக அதிகரித்துள்ளது.

அதில் 3 ஆயிரத்து 357 பேர் குணமடைந்துள்ளனர். தற்போது வைத்தியசாலைகளில் ஆயிரத்து 800 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். 13 பேர் சிகிச்சைகளின்போது உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-22)

## 74 பௌத்த பிக்குகள் தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஒக். 15

பிலியந்தலை, கஹபொல பகுதியிலுள்ள சிலுமின மகா விகாரையில் 74 பௌத்த பிக்குகள் மற்றும் 15 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட கிம்புலா வலவைச் சேர்ந்த ஒருவர் விகாரைக்குச் சென்று வந்ததையடுத்தே இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். கொரோனாத் தொற்றுக்குள்ளானவர் நெவில் பெர்னாண்டோ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-ற-இ)

பழிவாங்கும் நடவடிக்கை வேண்டாம்

# ரிஷாத் கைது முயற்சியை உடனடியாக நிறுத்துங்கள்

### அரசிடம் சஜித் வலியுறுத்து

கொழும்பு, ஒக். 15

'அரசுடன் இணையவில்லை என்ற காரணத்துக்காகப் பழிவாங்குவதற்காகவும், அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவுக்கு எதிரான தீர்ப்பால் ஏற்பட்டுள்ள அவமானத்தை மூடிமறைப்பதற்காகவும் முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனைக் கைதுசெய்யும் முயற்சியில் அரசு இறங்கியுள்ளது. இந்தக் கைது நடவடிக்கையை அரசு உடன் நிறுத்த வேண்டும்' இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ரிஷாத்தைக் கைது செய்யும் முயற்சி அரசின் திட்டமிட்ட பழிவாங்கல் நடவடிக்கை என்று நாட்டிலுள்ள அனைவருக்கும் தெளிவாகத் தெரிகின்றது. ரிஷாத் கைதுசெய்யப்பட்டால் அதை நாம் ஒருபோதும் ஏற்றுகொள்ளமாட்டோம். அதற்கு எதிராக நாம் போராடுவோம். நாடாளுமன்றத்தில் எமது எதிர்ப்பு நடவடிக்கைகள் பலமாக இருக்கும். இதேவேளை, நாட்டின் நீதித்துறை சுயாதீனத்தன்மையுடன் செயற்பட வேண்டும். பழிவாங்கல் நடவடிக்கைக்கு நீதித்துறை துணைபோகாது என்று நாம் நினைக்கின்றோம்' - என்றார்.

(ம-22)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அழைப்பும்

தோற்றம்
26 . 04 . 1939



மறைவு
15 . 09 . 2020

கடந்த (15.09.2020) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவி

### திருமதி செல்வரத்தினம் சிவமணி

அவர்களின் மரணச் செய்தியறிந்து ஓத்தாசை புரிந்தவர்களுக்கும் ஆறுதல் கூறிய அன்பு உள்ளங்களுக்கும், தொலைபேசி மூலம் தொடர்புகொண்டோர்களுக்கும், மலர் அஞ்சலி செலுத்தியோருக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரித்த அன்பர்களுக்கும், உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்களுக்கும், இறுதி நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (15.10.2020) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

22, கைலாசபிள்ளையார்
கோவிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
077 5975589

## மரண அறிவித்தல்



### இராசதுரை ஞானகுலேந்திரன்

இல.44/6, மணிக்கூட்டு வீதியை பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட இராசதுரை ஞானகுலேந்திரன் நேற்று (14.10.2020) புதன்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசதுரை திரவியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், லலிதாவின் அன்புக் கணவரும், சிந்துஜா, அனித்தா, பிரவின் ஆகியோரின் அன்புத் தந்தையும், விஜயபாஸ்கரன், ஜெகமலர், ஜெயறஞ்சினி, சந்திரசேகரன், ஜெயக்குமாரி, வசந்தகுமாரி, தயானந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
சந்திரசேகரன் (சந்திரன்)
தயானந்தன் (தயான்)

077 510 5713, 077 5872 734

## மரண அறிவித்தல்



### திருமதி பத்மநாதன் பராசக்தி

கருங்காலி காரைநகரைப் பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் பராசக்தி நேற்று காலமானார். இவர் இரத்தினசிங்கம் சிவஜோதியின் மகளும் சபாரத்தினம் செல்லம்மாவின் மருமகளும் ஸ்ரீகாந்தன் (லண்டன்),மோகனரூபி(கனடா), யசோதா (வவுனியா), ரேணுகா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் சசிகரன் (கனடா), சிறிகரன் (வவுனியா), ரஜீவ் குமார் (கனடா) ஆகியோரின் மாமியாரும் தீபனாவின் பேத்தியும் தனலக்ஷ்மி, காலஞ்சென்ற ஸ்ரீஸ்கந்தராஜா, சிவக்குமார், ஐஸ்வரியராணி, யோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் தர்மராஜா, பரமேஸ்வரி, நந்தகுமார் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வியாழக்கிழமை காலை முதல் 58 /28 ஞானவைரவர் கோயில் வீதி இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு. இன்றைய தினம் பிற்பகல் 1 மணியளவில் இறுதிக்கிரியைகள் இடம் பெறவுள்ளன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல் : குடும்பத்தினர்
தொடர்பு : 0766398604

### சங்கிலி தவறவிடப்பட்டுள்ளது

பருத்தித்துறை பிரதான வீதியில் நெல்லியடிசந்திக்கு அருகாமையில் நேற்று (14.10.2020) சங்கிலி தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: 077 556 1275

### பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள சிறு வைத்திய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கிநின்று வேலை செய்யக்கூடிய பணிப்பெண் ஒருவர் தேவை.

தொடர்பு: 077 2626 944

### A/L CHEMISTRY

COVID-19 காரணமாக A/L மாணவர்களின் நலன் கருதி அனைத்து அலகுகளுக்குமான இரசாயனவியல் பாட நூல்கள், பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.
தொடர்புகளுக்கு Mr. S.Sureshkumar
077 555 9028

## 6வது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
27 . 09 . 1990



மறைவு
23 . 09 . 2014

அமரர்

### தயாபரன் சிவதர்ஷன்

(முன்னாள் உரிமையாளர் சிவதயா அச்சகம்)

சிவதர்ஷன் வான்ஏகி
ஆறாண்டு ஆனாலும்
எம்முயிரில் கலந்து
நிதம் உயிரோடு வாழ்கிறான்
அவனியிலே அவன்
கண்ட கனவுகளை
சோதரர்கள் நனவாக்கும் காலமிது!

தயா அச்சகம்,
92(150), நாவலர் றோட்,
யாழ்ப்பாணம்.
362, கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்,
தயா வெளியீடு.
077 396 5214

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆங்கில பாட ஆசிரியை
திருமதி பாங்கஜவதனி சிவயோகநாதன்
அவர்களின் அன்புத் தாயார்

### பற்குணராஜா மங்களேஸ்வரி

நேற்று (14.10.2020) புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

கல்லூரிச் சமூகம்
யா/அருணோதயக் கல்லூரி அளவெட்டி.





## ரபாடா, அஸ்வின் மிரட்டல்

# டெல்லி கப்பிட்டல்ஸிடம் ராஜஸ்தான் படுதோல்வி!



டுபாய், ஒக். 15

ஐ.பி.எல் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸை 13 ஓட்டங்களால் வென்றது டெல்லி கப்பிட்டல்ஸ்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற டெல்லி அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக பிருத்வி மற்றும் தவான். முதல் பந்திலேயே ஆச்சரின் அசுர வேகத்தில் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார் பிருத்வி. ரகானே வெறும் 2 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். 9 பந்துகளை இதற்காக அவர் எதிர்கொண்டார்.

தவான், ஸ்ரேயாஸ் இருவரும் இணைந்து ஆட்டத்தை நகர்த்திச் சென்றனர். இலக்குச் சரிவைக் கருத்தில்கொண்டு நிதானமான முறையில் அவர்கள் விளையாடினர். 30 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் தவான். அவர் 57 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தவானின் ஆட்டமிழப்பு ஸ்ரேயாஸை மேலும் நெருக்கடிக்குள் தள்ளியது. அதிரடி வீரரான ஸ்ரொய்னிஸால் 19 பந்துகளில் 18 ஓட்டங்களையே எடுக்க முடிந்தது. 53 ஓட்டங்களுடன் ஸ்ரேயாஸும் ஆட்டமிழக்க முடிவில் 7 இலக்குகளை இழந்து 161ஓட்டங்களைப் பெற்றது டெல்லி.

பந்துவீச்சில் ஆச்சர் 3 இலக்குகளையும், உனத்கட் 2 இலக்குகளையும், ரக்டி, கோபால் இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தானுக்கு ஆரம்ப வீரர்களாக ஸ்ரோக்ஸ் மற்றும் பட்லர் இருவரும் களமிறங்கினர். 9 பந்துகளில் 22 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார் பட்லர். அணித் தலைவர் சிமித் வெறும் ஓர் ஓட்டத்துடன் அஸ்வினிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். சாம்சன், ஸ்ரோக்ஸ் இருவரும் இணைந்து அதிரடிகாட்ட வெற்றிக் காற்று ராஜஸ்தானின் பக்கம் பலமாக வீசியது. 41 ஓட்டங்களுடன் ஸ்ரோக்ஸும் 25 ஓட்டங்களுடன் சாம்சனும் ஆட்டமிழந்தனர். நம்பிக்கை கொடுத்த உத்தப்பா 32 ஓட்டங்களுடன் வீழ்ந்தார். திவெட்டியாவின் கடைசிக்கட்ட அதிரடி நேற்றுக் கைகொடுக்கவில்லை. அவர் 18 பந்துகளில் 14 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். முடிவில் 8 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களை மட்டுமே பெற்றது ராஜஸ்தான். 13 ஓட்டங்களால் வென்றது டெல்லி.

ரபாடா 4 பந்துப்பரிமாற்றங்கள் வீசி 28 ஓட்டங்களையும் அஸ்வின் 4 பந்துப்பரிமாற்றங்களை வீசி 17 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்தனர். இந்தச் சிக்கன பந்துப்பரிமாற்றங்கள் ராஜஸ்தானை நெருக்கடிக்குள் தள்ளி டெல்லியின் வெற்றிக்குப் பேருதவி புரிந்தன. (ம)

## ஆசிய செஸ் போட்டியில் இலங்கை 8 ஆவது இடத்தில்

கொழும்பு, ஒக்.15

ஆசிய செஸ் போட்டிகள் இணையதளம் வழியாக தற்பொழுது நடைபெற்று வருகின்ற நிலையில், 42 நாடுகள் கலந்துகொண்ட ஆண்களுக்கான இந்தப் போட்டியில் இலங்கை ஆண்கள் அணி 8 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

37 நாடுகள் கலந்துகொண்ட பெண்களுக்கான இந்தப் போட்டியில் இலங்கை மகளிர் அணியும் 8 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

இந்தப் போட்டிகள் கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமானதுடன் எதிர்வரும் 24 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன. இணையத்தளம் ஊடாக இந்தப் போட்டிகள் நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும். (ற)

### கட்டுநாயக்கவிலும்...

ரவு விதிக்கப்படும் என்று இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் பணியாற்றும் 43 பேருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை நேற்றுக் கண்டறியப்பட்டது. அத்துடன் நேற்று மாலை 5 மணிவரை 110 பணியாளர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இதையடுத்தே இந்த உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டாலும் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்துக்குள் உள்ள தொழிற்சாலைகள் செயற்பட அனுமதிக்கப்படும் என்று இராணுவத் தளபதி தெரிவித்தார். கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்துக்குள் உள்ள தொழிற்சாலைகளின் ஊழியர்கள் தங்கள் உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி பயணிக்க அனுமதிக்கப்படுவார்கள். கம்பஹா மாவட்டத்தில் 18 பொலிஸ் பகுதிகளுக்குள் தற்போது ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### பொலிஸார்...

காகப் பொலிஸ் குழுக்கள் களமிறக்கப்பட்டுள்ளன. எனினும், அவர் பொலிஸாரின் வலைக்குள் சிக்காமல் தலைமறைவாகியுள்ளார்.

கடந்த 2009ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது, இலங்கை போக்குவரத்து சபைக்குச் சொந்தமான பஸ்களை முறைகேடாகப் பயன்படுத்தி, இடம்பெயர்ந்து புத்தளத்தில் வாழும் வன்னி மாவட்ட வாக்காளர்களை வாக்களிப்பதற்கு அழைத்துச் சென்றிருந்தார் என்று முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரின் கணக்காளர் உள்ளிட்ட மூவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. மூவரையும் கைதுசெய்யுமாறு பொலிஸாருக்கு சட்டமா அதிபர் நேற்றுமுன்தினம் உத்தரவிட்டிருந்தார். அதற்கமைய குறித்த குற்றச்சாட்டு தொடர்பில் ரிஷாத் பதியுதீனைக் கைதுசெய்வதற்காக அவரின் கொழும்பு மற்றும் மன்னார் பகுதிகளில் அமைந்துள்ள இல்லங்களில் பொலிஸார் நேற்றுமுன்தினம் தேடுதல் நடத்தியுள்ளனர்.

**மெய்ப்பாதுகாவலர் கைது**

குறித்த இரு வீடுகளிலும் அவர் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அவர் அமைச்சராக இருந்த காலப்பகுதியில் மெய்ப்பாதுகாவலராகச் செயற்பட்ட பொலிஸ் உத்தியோத்தர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் வெள்ளவத்தைப் பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். அத்துடன் அவருக்குச் சொந்தமான சொகுசு வாகனங்கள் இரண்டும் கையகப்படுத்தப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் பேச்சாளர் கூறினார். கையகப்படுத்தப்பட்டுள்ள குறித்த வாகனங்களிலிருந்து இரண்டு கைத்துப்பாக்கிகள், நான்கு மெகசின்கள், 48 ரவைகள் என்பன மீட்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் பேச்சாளர் குறிப்பிட்டார்.

**கணக்காளர் கைது**

இதேவேளை, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் கணக்காளர் அழகரத்னம் மனோரஞ்சன் என்பவர் கிருலப்பனை குற்றப்புலனாய்வுப்பிரிவு அதிகாரிகளினால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் கொழும்பு தலைமை நீதிவான் பிரியந்த லியனகே நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

**வெளிநாடு செல்லத் தடை**

பொலிஸாரின் வலையில் சிக்காமல் ரிஷாத் பதியுதீன் தலைமறைவாகியுள்ள நிலையில் அவருக்கு எதிராக வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தேர்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டுக்காகவே ரிஷாத் பதியுதீன் உள்ளிட்ட மூவருக்கு கொழும்பு தலைமை நீதிவான் பிரியந்த லியனகே இந்தத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ம-22)

### நோர்வே....

ருந்தார் என்று எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்தார். புலம்பெயர் தமிழ் ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இலங்கைக்கான சமாதான அனுசரணைப் பணியில் பிரான்ஸ் பங்கேற்க வேண்டுமென இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகா விரும்பினார் எனவும் எரிக் சொல்ஹெய்ம் குறிப்பிட்டார்.

எனினும் இலங்கைக்கான அனுசரணை பணியில் நோர்வேயே பங்கெடுக்கவேண்டுமென விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் விரும்பியதன் அதனடிப்படையிலேயே நோர்வே இந்தப்பணியில் இறங்கியது எனவும் எரிக்சொல்ஹெய்ம் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த அனுசரணைப்பணிக்கு அழைப்பு விடுப்பதற்காக 1998 ஆம் ஆண்டில் நோர்வேயில் உள்ள தனது பணியகத்துக்கு வந்த விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள் அங்கு வைத்து இதற்குரிய நேரடி அழைப்பை விடுத்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-ஒ.இ)





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.